19.09.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பாம்பன் மீனவர் வலையில் ௩ கிலோ கணவாய் மீன்

ராமேஸ்வரம்:பாம்பன் மீனவர் வலையில் 3 கிலோ எடையில் ராட்சத கணவாய் மீன் சிக்கியது.பாம்பன் தென் கடல் பகுதியில் இருந்து நேற்று முன் தினம் மாலை 80 க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில், 320 மீனவர்கள் கடலுக்கு சென்றனர். ஆழ்கடலில் பலத்த சூறாவளி வீசியதால், எதிர்பார்த்த அளவுக்கு மீன்கள் கிடைக்கவில்லை. இதனால் பெரும்பாலான படகுகளில் மீன் வரத்து குறைவாக இருந்தது.

சில படகுகளில் தலா 3 கிலோ எடையுள்ள ராட்சத கணவாய் மீன்கள் சிக்கியது. அவற்றை தென் கொரியா, ஜப்பான் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, கிலோ ரூ.160 வீதம் கடல் உணவு ஏற்றுமதி நிறுவனத்தினர் கொள்முதல் செய்தனர். கணவாய் மீன்கள் குறைந்தபட்சம் அரை கிலோ, முக்கால் கிலோ எடை அளவுகளில் மீன்பிடி வலைகளில் சிக்குவதுண்டு. கருப்பு நிற திரவத்தை கடல் நீரில் பீய்ச்சி, அந்த இடத்தையே கருமையாக்கி தப்பிச் செல்லும் தன்மை உடைய கணவாய் மீன்கள் தற்போது அதிக எடையுடன் சிக்கி உள்ளது.

**இட்லி, பர்கர் - உடல் விரும்பும் உணவு எது? மருத்துவர் கு.சிவராமன்**



பண்பாட்டின் வேர்களை களைந்து, உயிர்தரும் உணவுகளுக்கு பதிலாக ஊனம் தரும் உணவுகளை உண்டு வாழ்ந்து வருகிறோம். அப்படி நாம் இழந்தவையும், தொலைத்தவையும் தான், இன்று நம்மைச் சூழ்ந்த நோய்களுக்கு காரணம் என எழுதியும், பேசியும் வருபவர் சித்த மருத்துவர் கு.சிவராமன். பதிமூன்று நூல்கள் எழுதிய பாரம் பரிய மருத்துவ எழுத்தாளர். விருதுநகர் மாவட்டம் சாத்துார் இவரது மண்.வாதம், பித்தம், கபம் கண்டு பிடிக்கும் மருத்துவராக மட்டும் அல்லாமல், 'இன்றைய சுற்றுச் சூழல் மாசு தான், அத்தனை நோய் சூழலுக்கும் காரணம்' என்று வாதம் செய்கிறார். வணிகச்சந்தைக்குள் உணவு வளைந்து விட்டதால், கலோரி கணக்கு காட்டி மருத்துவ உலகம் உணவு கலாசாரத்தை சிதைக்கிறது; அறிவியலின் அசுரத்தனத்தால் மனிதனின் மனமும், வாழ்வியலும் பாழாகி விட்டது என வருத்தப்படுகிறார்.

மதுரை வந்த அவரோடு ஒரு நேர்காணல்..

**கை நாடி பிடிக்கும் நீங்கள், எழுத்தின் நாடி பிடித்தது எப்படி?**

நெல்லை சேவியர் பள்ளியில் படிக்கும் போது, தமிழாசிரியர் கிர கோரி தமிழார்வம் ஊட்டினார். கல்லுாரியில் சித்தமருத்துவம் படித்ததால், இயல்பாகவே தமிழ் நுால்களை படிக்க ஆரம்பித்தேன். அப்போதே மருத்துவம் சார்ந்த கட்டுரைகள் எழுதினேன். உணவு ஆராய்ச்சி

நிறுவனம் ஒன்றில் பகுதிநேரமாக பணியாற்றிய போது, பாரம்பரிய அரிசி ரகங்கள் பற்றி எல்லாம் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.பாரம்பரிய உணவுகள் தொடர்பாக நமக்கு விழிப்புணர்வு அவசியம் என்று உணர்ந்தேன். தொடர்ந்து 18 நாடுகளுக்கு சென்று வந்தேன். அங்கு எல்லாம், உணவியல் கருத்தரங்குகளில் பங்கேற்பது, ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிப்பது என என் எழுத்துலகம் விரிவடைந்தது. 'ஆஸ்துமா நோய் தீர்க்கும் மூலிகைகள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து, தஞ்சை தமிழ் பல்கலையில் முனைவர் பட்டம் பெற்றேன்.எனது 'வாங்க வாழலாம்' என்ற நூல் 2004ல் தமிழக அரசின் சிறந்த நூலாக தேர்வானது. **மழைக்கும், வெயிலுக்குமான உணவை தேர்வு செய்து சாப்பிட,மக்களுக்கு இந்த அவசர யுகத்தில் நேரம் இருக்கிறதா?** அவசர யுகம் என்றாலும் உணவு விஷயத்தில், சில ஒழுக்கங்களை கடைபிடித்தாக வேண்டும். உணவுக்காக சமையலறையில் செலவிடும் நேரத்தை, நல்வாழ்விற்காக செலவிடும் நேரம் என நினைக்க வேண்டும். அவசர வாழ்விற்கு விலக்கு, 'உணவு' அல்ல.

**சளிப் பிடித்தால் துாதுவளை ரசம், தும்மல் வந்தால் சுக்கு காப்பி என பாரம்பரிய 'உணவு மருந்துகள்' நகர வாழ்க்கையில் சாத்தியமா?** நம் உணவுப்பழக்கத்தில் பன்னாட்டு வணிகம் புகுந்ததால், இந்த கேள்வி எழுகிறது. சவுகரியம் வேண்டும் என்று கருதியதால், நம் உணவுப்பழக்கத்தில் வியாபாரம் புகுந்து விட்டது. உணவு விஷயத்தை பொதுமைப்படுத்த கூடாது. சைபீரிய உணவும், ஆஸ்திரேலிய உணவும், நமது உணவும் ஒன்றாக வராது. நமது காற்று, நமது மண், நம் சூழல் வேறு. நாம் எந்த மரபை ஒட்டி வாழ் கிறோம் என்பது முக்கியம். இட்லி, நமது மரபணுவில் ஊறிப்போனது. அதனை சாப்பிடும் போது, மரபணுக்கள் உணர்ந்து கொள்ளும். ஆனால் மயோனைஸ் தட விய பர்கரை சாப்பிட்டால், அதனை உடல் ஏற்க வேண்டும் என்ற அவசியம்

இல்லை.தொழில், பணம் என நாம் அக்கறை கொள்வது போல, மரபை மறக்காமல் உணவு, வாழ்வியல் மீது அக்கறை காட்ட வேண்டும். முடிந்தவரை பன்னாட்டு உணவுகளை தவிர்த்து, நம் அருகா மையில்கிடைக்கும் பழம், காய்கறிகளை சாப்பிட வேண்டும். பிரச்னைகளுக்கு பிறகு, நூடுல்ஸ் பாதுகாப்பானது என்று இப்போது கூறுகிறார்கள். பாதுகாப்பா என்பது கேள்வி அல்ல; அவசியமா என கேட்கிறேன்.பாரம்பரிய மருத்துவத்தில், நம் நோய் தீர்க்கும் அத்தனை மூலி கைகளும் உண்டு. சிலவற்றை மாடியில் வளர்க்கலாம். அதற்கான விழிப்புணர்வு தேவை. குறுந்தானியங்களை உணவில் சேர்க்கும் பழக்கம் வர வேண்டும்.

**குறுந்தானியங்களின் அதிக விலையால், நடுத்தர மக்கள் கூடவாங்க முடியவில்லையே?**

இவை பணக்கார உணவாக மாறிவருகிறதே என்ற கவலை எனக்கு உண்டு. தினை, வரகு, கம்பு போன்றவற்றை ரேஷன் கடைகளில் விற்கும் நிலை வரவேண்டும். கரும்பு, நெல் போன்று இவற்றிற்கும் குறைந்தபட்ச விலையை அரசு நிர்ணயிக்க வேண்டும். குறுந்தானியம் பயிரிடும் விவசாயிகளுக்கு அரசு சலுகைகள் தர வேண்டும். அப்போது குறுந்தானிய பயன்பாடு பரவலாகும். நமது பாரம்பரிய மருத்துவமான சித்தமருத்துவம், இன்றையகாலக்கட்டத்திற்கு பொருந்துகிறதா?

**இன்னும், நாடி பிடித்து அத்தனை நோயையும் அறிய முடியுமா?**

அன்றைய காற்றும், தண்ணீரும் இன்று இல்லை. எனவே நாடி சாஸ்திரத்தின் அன்றைய இலக்கணமும் இன்று இல்லை. நாடிப்பிடிப்பின் நுண்கணிப்பு மாறிவிட்டது. ஏனெனில் மனிதனின் வாழ்வியல் மாறிவிட்டது. நாடிப்பிடிப்புடன் நவீன அறிவியலை பயன்படுத்தி,

சித்தமருத்துவத்தை உள்வாங்க வேண்டும்.இங்கு நோய் முக்கியம் அல்ல; நோயாளி தான் முக்கியம். எந்த வகையான நோயாளி, எந்த வாழ் வியல் சிக்கலில் உள்ளவர் என கவனிக்க வேண்டும். நவீன அறிவியலின் கண்ணோட்டத்தோடு பார்த்து, சித்தமருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும்.வருங்காலத்தில் கூட்டு மருத்துவ சிகிச்சை முக்கியத்துவம் பெறும். ஒரே மேஜையில் நவீன மருத்தவர், சித்த மருத்துவர், இயற்கை மருத்துவர் இருப்பார். வெளிநாடுகளில் இது பிரபலமாகி வருகிறது. சீனாவில், ஆங்கில மருத்துவத்தை விட பாரம்பரிய சீன மருத்துவம் பிரபலமாக உள்ளது.

**ஆரோக்கியமான உடலுக்கு, தினமும் என்ன செய்ய வேண்டும்?**

தினமும் 45 நிமிடத்தில் 3 கி.மீ., நடைப்பயணம், 15 நிமிடம் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி, 7 மணி நேர துாக்கம், 3 லிட்டர் தண்ணீர் அருந்துவது அவசியம். எங்கோ விளையும் ஆப்பிளை சாப்பிடுவதை விட, நம்மூர் கொய்யா, இலந்தை, நாவல், பப்பாளி, நெல்லி, வாழைப்பழங்களை காலை உணவுக்கு முன்பு சாப்பிடலாம். மேலும் பேச 94440 27455.

## காவிரி டெல்டா பகுதிகளில் முறைப்பாசனம்!, ம்பற்றாக்குறையை சமாளிக்க ஏற்பாடு



கடலூர்: டெல்டா கடைமடைப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, காவிரி நீரை முறைப்பாசன முறையில் பகிர்ந்தளித்து பயிர்களை காப்பாற்ற அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

போதிய மழை இல்லாத காரணத்தினால் தமிழகத்திற்கு தண்ணீர் தர கர்நாடக அரசு மறுத்து வருவதால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. நேற்று முன்தினம் நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 74.12 அடியாக குறைந்தது. அணைக்கு வினாடிக்கு 825 கனஅடி அளவே தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில் அணையிலிருந்து 13 ஆயிரத்து 800 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

கல்லணையில் இருந்து வெண்ணாறு மூலமாக திருவாரூர், நாகை மாவட்டத்திற்கும், ஜி.ஏ., அணைக்கட்டு மூலம் புதுக்கோட்டை மற்றும் தஞ்சை மாவட்டத்திற்கும், கொள்ளிடம் ஆறு மூலம் கடலூர், தஞ்சை மற்றும் நாகை மாவட்டத்திற்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரில் 10 சதவீதம் மட்டுமே கல்லணையில் இருந்து கொள்ளிடம் ஆறு மூலம் பாசனத்திற்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அதனை கீழணையில் இருந்து தெற்கு ராஜன் வாய்க்கால் மூலம் நாகை மாவட்டத்திற்கும், குமுக்கி மண்ணியாறு மூலம் தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதிக்கும், வடக்கு ராஜன், வடவாறு மற்றும் வீராணம் மூலம் கடலூர் மாவட்டத்தில் டெல்டா பாசன பகுதியில் உள்ள ஒரு லட்சத்து 31 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாய்ச்ச வேண்டும்.

இந்நிலையில் கடலூர் மாவட்டத்தில் டெல்டா பாசன பகுதியில் தற்போது சம்பா சாகுபடி பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. பெரும் பகுதியில் நேரடி நெல் விதைப்பும், பிற பகுதியில் நாற்றங்கால் விட்டு நாற்று பறிக்கும் நிலையில் உள்ளது. இந்நிலையில், கீழணையில்

இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு கணிசமாக குறைந்துள்ளதோடு, வெயிலின் தாக்கமும் அதிகமாக உள்ளதால், கடைமடை பகுதிகளில் போதிய தண்ணீர் இன்றி நாற்றுகள் கருகி வருகின்றன. இதனால், நடவு செய்த நெற்பயிரைக் காப்பாற்ற தண்ணீரைக் கூடுதலாக திறந்து விட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனால், மேட்டூர் அணையின் நீர் மட்டம் குறைவாக உள்ளதாலும், வடகிழக்குப் பருவமழை துவங்க நான்கு வாரம் ஆகும் என்பதாலும்; அதுவரை நடவு செய்துள்ள நெற்பயிரை காப்பாற்ற மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாக நேற்று காலை, கலெக்டர் முகாம் அலுவலகத்தில் கலெக்டர் சுரேஷ்குமார் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. பொதுப்பணி மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் பங்கேற்ற இக்கூட்டத்தில், கல்லணைக்கு வரும் தண்ணீரில் நமது பங்கீடான 10 சதவீதம் முழுமையாக பெறப்பட்டு வருகிறது. இருப்பினும், வெயிலின் தாக்கம் அதிகம் உள்ளதால் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளது. இதனால், கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் சென்றடைவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. பருவமழை துவங்க ஒரு மாதம் ஆகும். அதுவரை, தற்போது நமக்கு வந்து கொண்டுள்ள தண்ணீரை முறைப்பாசனம் செய்து பயிரை காப்பாற்ற முடிவு செய்யப்பட்டது.

அதனை ஏற்றுக் கொண்ட கலெக்டர், இதுகுறித்து டெல்டா பாசன பகுதி விவசாயிகளிடம் கருத்தை கேட்டு அவர்களின் ஒத்துழைப்புடன் முறைப்பாசன முறையை செயல்படுத்த உத்தரவிட்டார். அதன்பேரில் விவசாயிகளிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த பொதுப்பணி துறை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## அமராவதி ஆயக்கட்டில், சாகுபடி தீவிரம் புது நெல்லு... புது நாத்து!சம்பா நடவுக்கு வேளாண்துறை தயார்

உடுமலை :நடப்பு சம்பா பருவத்தில், அமராவதி ஆயக்கட்டு பகுதியில், நெல் சாகுபடியில், விவசாயிகள் உயர் விளைச்சல் பெற புதிய நெல் ரக விதைகள் உட்பட அனைத்து தேவைகளும், துறை சார்பில், தயார் நிலையில், வைக்கப்பட்டுள்ளதாக, வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

உடுமலை பகுதியில், அமராவதி பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளில், அணைப்பாசனம் மற்றும் பருவமழை அடிப்படையில், சராசரியாக குறுவை பருவத்தில், 400 எக்டரும், சம்பா பருவத்தில், 450 எக்டர் என, 850 எக்டர் பரப்பில், நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, 400 எக்டர் பரப்பில், கல்லாபுரம், பூச்சிமேடு, வேல்நகர், பூளவாடிபுதுார், மாவிளம்பாறை ஆகிய பகுதிகளில், குறுகிய கால நெல் ரகங்களான ஏஎஸ்டி 16, ஏடிடி 37, ஏடிடி 43 ஆகிய ரகங்கள், பயிரிடப்பட்டு, பயிர் வளர்ச்சி நிலையில் உள்ளது. இப்பகுதியில், 280 எக்டரில், விவசாயிகள், திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றியுள்ளனர். நெல் சாகுபடிக்கு தேவையான, உரங்கள், பயிர்பாதுகாப்பு மருந்துகள் வினியோகம் ஆகியவை வேளாண்துறை அதிகாரிகளால், ஆய்வு செய்யப்பட்டு, பற்றாக்குறை தவிர்க்கப்பட்டுள்ளது.

துறை சார்பில், தொழில்நுட்ப பயிற்சிகளும், வழங்கப்பட்டு வருகின்றன. வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில், அமராவதி அணை தண்ணீர் திறப்பு அடிப்படையில், புதிய ஆயக்கட்டு விவசாயிகளும், சம்பா சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். இது குறித்து உடுமலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் மகாலிங்கம் கூறியதாவது: சம்பா பருவத்திற்கு ஏற்ற, புதிய நெல் ரகம் ஏடிடி(ஆர்) 49, சான்று பெற்ற விதைகள், 11 ஆயிரம் கிலோ, உடுமலை வேளாண் விரிவாக்க மையம் மற்றும் குறிச்சிக்கோட்டை துணை வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இவ்விதைகள் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் நெல் இயக்கத்தில், கிலோவிற்கு, 10 ரூபாய் மானிய விலையில், விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஏடிடி(ஆர்) 49, ரகம், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தால், உருவாக்கப்பட்டு, கோவை வேளாண் பல்கலைகழகத்தால், 2011ம் ஆண்டு வெளியிடப்பட்ட புதிய ரகமாகும். இது பின்சம்பா மற்றும் தாளடி பருவத்தில், பயிர் செய்வதற்கேற்ப, 132 நாட்கள் வயதுடைய நடுத்தர சன்ன ரகமாகும். சிஆர்., 1009 மற்றும் சீரகச்சம்பா ஆகிய தாய் ரகங்களிலிருந்து, உருவாக்கப்பட்டதாகும். வெள்ளை அரிசியை உடைய, இந்த ரகம், அதிகபட்சமாக எக்டருக்கு, 10,250 கிலோ வரை மகசூல் தரக்கூடியதாகும். குலைநோய், இலையுறை அழுகல்நோய், இலையுறை கருகல் நோய், இலை சுருட்டு புழு மற்றும் பழுப்பு இலை புள்ளி நோய்க்கும், மிதமான எதிர்ப்பு திறன் உடையதாகும். சாப்பாட்டிற்கும், சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதற்கும், மிகவும் ஏற்ற ரகமாகும். பருக்கைகள் ஒன்றோடு ஒன்று ஒட்டாது பொலபொலவென இருக்கும்.

நடப்பு சம்பா பருவத்திற்கு, ஏடிடி(ஆர்) 49, சான்று பெற்ற விதைகளை கிலோவிற்கு, 10 ரூபாய் மானியத்தில், வேளாண் விரிவாக்க மையத்திலிருந்து, உதவி வேளாண் அலுவலர்களை அணுகலாம். கல்லாபுரம் பூச்சிமேடு பகுதிக்கு, உதவி வேளாண் அலுவலர் மார்க்கண்டன்- 98949-36328, எலையமுத்துார், பார்த்தசாரதிபுரம் பகுதிக்கு சங்கர்கணேஷ் 99428-86750, வலையபாளையம் பகுதிக்கு அமல்ராஜ் 93606-93660 என்ற மொபைல் எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## குளிர்காலத்திலும் குண்டு மல்லியில் மகசூல் பெற முயற்சி: புது ஆராய்ச்சியில் வேளாண் பல்கலை

கோவை :குளிர்காலத்திலும், தடையின்றி, குண்டு மல்லிகை பூ சாகுபடி செய்வதற்கான, தொழில்நுட்ப ஆராய்ச்சிகள், வேளாண் பல்கலையில் துரிதமாகியுள்ளன.

மல்லிகை பூவானது, கோவை, ஈரோடு, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, மதுரை, திண்டுக்கல், தேனி, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. மல்லிகையில், நவம்பர் - பிப்ரவரி மாதங்களில் (குளிர்காலம்), குறைந்த உற்பத்தியும்; மார்ச் - அக்டோபர் மாதங்களில், அதிக மற்றும் நிலையான உற்பத்தியும் கிடைக்கிறது.இதனால், குளிர்காலத்திலும், குண்டு மல்லியில், அதிக மகசூல் பெறுவதற்காக, வேளாண் பல்கலை, எழிலுாட்டும், மலரியல் துறை சார்பில், ஆராய்ச்சிகள் துவங்கப்பட்டுள்ளது. துறை தலைவர் கண்ணன் தலைமையிலான, பேராசிரியர்கள் மற்றும் பி.எச்.டி., மாணவர்கள் குழு ஈடுபட்டுள்ளனர்.வேளாண் பல்கலை, எழிலுாட்டும், மலரியல் துறை தலைவர் கண்ணன் கூறியதாவது:இந்தியாவில், பாரம்பரிய, கலாசாரப்படி பண்டிகைகள், திரு விழாக்கள், சுபதினங்களில் அதிகம் விற்பனை செய்யப்படுவது உதிரிப்பூக்கள் தான். இதில், மல்லிகை, ரோஜா முக்கிய பங்கு வகிக்கின்றன.

மல்லிகை பூ சாகுபடி பருவத்தில், குளிர் காலங்களில் உற்பத்தி குறைவு. இதனால், விளைநிலங்களில், மல்லிகை மட்டுமே சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய விவசாயிகளுக்காக, குளிர்காலத்திலும், அதிக மகசூல் தரும்படியான தொழில்நுட்பங்கள், குறித்த ஆராய்ச்சி துவங்கப்பட்டுள்ளது.இதற்கான நிதி, இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் மூலம் பெறப்படுகிறது. தற்போது, ஆராய்ச்சிக்காக, வேளாண் பல்கலை, தாவரவியல் பூங்காவிலுள்ள, ஒரு ஏக்கர் மற்றும் பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள ஒரு விவசாயி ஒருவரின், ஒரு ஏக்கர் நிலமும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

குளிர்காலத்தில், மல்லிகையில், இலை நன்றாக வளர்ந்தும், பூக்கும் பூக்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். ஆகையால், வளர்ச்சி ஊக்கிகளை மண்ணுக்கு பாதிப்பேற்படுத்தாதவாறு, இலையின் மீது தெளித்து, இலையின் வளர்ச்சியை கட்டுப்படுத்தல் மற்றும் கவாத்து எனும், பழைய இலைகளை நீக்கும் தொழில்நுட்பம் ஆகியவற்றை மையமாக கொண்டு ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன.முதற்கட்ட ஆராய்ச்சியில், 50 சதவீதம் முடிந்துள்ளது. இரண்டாம் கட்ட ஆராய்ச்சி நிறைவுறும் போது, விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தப்படும். மேலும், இதை கையாளும் முறை குறித்து, பயிற்சிகள் விவசாயிகளுக்கு விரைவில் அளிக்கப்படும். இவ்வாறு, அவர் கூறினார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் சரிவு: வெளியில் தெரியும் சர்ச் கோபுரம்



மேட்டூர்: மேட்டூர் அணை நீர்மட்டம், 72.860 அடியாக குறைந்ததால், பண்ணவாடி நீர்பரப்பு பகுதியில் நீரில் மூழ்கியிருந்த, கிறிஸ்தவ ஆலய கோபுர முகப்பு வெளியில் தெரிகிறது. மேட்டூர் அணை நீர்மட்டம், 77 அடிக்கு மேல் உயரும் போது, பண்ணவாடி நீர்பரப்பு பகுதியில், 80 ஆண்டுக்கு முன் கட்டப்பட்ட கிறிஸ்த ஆலயத்தின் கோபுரம் முழுமையாக

நீருக்குள் மூழ்கி விடும். டெல்டா பாசனத்துக்கு தொடர்ச்சியாக தண்ணீர் திறப்பதால், கடந்த மாதம், 28ம் தேதி, 93 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 72.880 அடியாக சரிந்தது விட்டது. இதனால், பண்ணவாடி நீர்பரப்பு பகுதியில் நீருக்குள் மூழ்கியிருந்த கிறிஸ்தவ ஆலய இரட்டை கோபுரங்களில் ஒன்று சேதமடைந்த நிலையில், ஒரு கோபுரத்தின் முகப்பு மட்டும், 5 அடி உயரம் வெளியில் தெரிகிறது. நீர்மட்டம் மளமளவென சரிவதால், பண்ணவாடி நீர்பரப்பு பகுதியிலுள்ள ஜலகண்டேஸ்வரர் கோவில் நந்தி சிலையும், விரைவில் நீருக்கு வெளியே தெரியும்.

## இறக்குமதி வரி உயர்வால் எண்ணெய் விலை உயரும்

சேலம்: "வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பாமாயில், சூரிகாந்தி எண்ணெய்களுக்கு, இறக்குமதி வரி, 5 சதவீதம் உயர்ந்துள்ளதால், அனைத்து வகையான எண்ணெய் விலை உயரும்," என, சேலம், மாநகர தாவர எண்ணெய் வணிகர் சங்க தலைவர் சந்திரகாசன் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறியதாவது: மத்திய அரசு, மலேசியா உள்ளிட்ட வெளி நாடுகளில் இருந்து, இறக்குமதி செய்யப்படும் பாமாயில், சூரிய காந்தி எண்ணெய் உள்ளிட்டவைக்கு, இறக்குமதி வரி, 5 சதவீதம் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் வரை, 7.5 சதவீதமாக இருந்த வரி, நேற்று முதல், 12.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, பாமாயில், சூரியகாந்தி மட்டுமின்றி அனைத்து வகையான எண்ணெய் விலையும் உயரும் வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர் கூறினார். தற்போது, சேலத்தில், சில்லரை விற்பனையில், எண்ணெய் விலை, லிட்டருக்கு, 2 ரூபாய் முதல், 10 ரூபாய் வரை, உயர்ந்துள்ளது.

## நெல்லிச்சாறு விற்பனைக்கு தடை: உணவு பாதுகாப்பு அலுவலர் அதிரடி

சேலம்: சேலம், வின் ஸ்டார் டிரேடர்ஸ் நிறுவன, நெல்லிச்சாறு தயாரிப்புக்கு, சேலம் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் டாக்டர் அனுராதா தடை விதித்துள்ளார். இதுகுறித்து, அவர் கூறியதாவது: சேலம், வின் ஸ்டார் டிரேடர்ஸ் தயாரித்து விற்பனை செய்து வந்த நெல்லிச்சாறு குறித்து, பல்வேறு புகார் வந்தது. இதையடுத்து, கடந்த, ஆகஸ்ட், 13ம் தேதி நேரடியாக சம்மந்தப்பட்ட நிறுவனத்தில் ஆய்வு நடத்தினோம். இதில், நெல்லிச்சாறு மாதிரி எடுக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆய்வில், 'நெல்லிச்சாறு உணவு பாதுகாப்பற்றது, தரம் குறைவானது' என, கண்டறியப்பட்டது. இதையடுத்து, நெல்லிச்சாறு தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு, அந்நிறுவனத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு, வரும், 15 நாட்களளுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இடைப்பட்ட நாளில், நாங்கள் குறிப்பிட்டுள்ள குறைகளை, நிவர்த்தி செய்ய வேண்டும். அதுவரை விற்பனை செய்யக்கூடாது. இதுதொடர்பாக, உணவு பாதுகாப்பு சட்டப்படி, சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

வழக்கு தொடர முடிவு: சேலம், வின்ஸ்டார் இந்தியாவின் நிறுவனர் சிவக்குமார் கூறியதாவது: சேலம் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் கூறி இருக்கும் குற்றச்சாட்டு, நெல்லிச்சாறு விற்பனைக்கு விதித்து இருக்கும் தடை, 100 சதவீதம் தவறான முடிவு. பிற மாவட்டங்களில், உணவு பாதுகாப்பு அலுவலர்கள் யாரும் நெல்லிச்சாறுக்கு தடை விதிக்கவில்லை. இயற்கையில் கிடைக்கக் கூடிய நெல்லிக்காயில் இருந்து எடுக்கப்படும் சாறில் எவ்வித வேதிப்பொருட்களும் கலப்பட செய்யப்படுவது இல்லை. தற்போது, தடை உத்தரவு பிறப்பித்துள்ள அதிகாரி, சில நாட்களுக்கு முன்னர் வரை, எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை. அதே நேரத்தில், இன்று (நேற்று )

கலெக்டர் அலுவலகம் சென்ற அந்த அதிகாரி, திடீரென நெல்லிச்சாறுக்கு தடை விதித்துள்ளார். இந்த சாற்றில் எவ்வித வேதிப்பொருளும் கலப்பபடம் செய்யப்பட வில்லை என, 100 சதவீதம் உத்திரவாதம் வழங்குகிறோம். இந்த பிரச்சனையில், எங்களின் நிறுவனத்துக்கு தடை விதித்ததை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**பயிறு வகைகள் உற்பத்தியை பெருக்க 50 சதவீத மானியத்தில் டி.ஏ.பி., உரம்**

ஓசூர்: ஓசூர், தளி, கெலமங்கலம் பகுதியில், பயிறு வகைகளின் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில், 50 சதவீத மானியத்தில், டி.ஏ.பி., உரம் வழங்கப்பட உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 12,800 ஹெக்டேர் பரப்பளவில், பயிறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகம் பேர் துவரை சாகுபடி செய்துள்ளனர். பயிறு வகைகளில் உற்பத்தியை பெருக்க, 2 சதவீத டி.ஏ.பி., கரைசல் தெளிக்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 10,000 ஹெக்டேர் பரப்பளவில், 65 லட்சம் ரூபாய் மானியத்தில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஓசூர் தாலுகாவில், 1,700 ஹெக்டேர் பரப்பளவிலும், தளி பகுதியில், 2,100 ஹெக்டேர் பரப்பளவிலும், கெலமங்கலம் பகுதியில், 1,500 ஹெக்டேர் பரப்பளவிலும், 50 சதவீத மானியத்தில் டி.ஏ.பி., உரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தபட உள்ளது.

இதற்காக ஓசூர், பாகலூர், முதுகானப்பள்ளி, போடிச்சிப்பள்ளி, அஞ்செட்டி, அந்தேவனப்பள்ளி, தொட்டஉப்பனூர் தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தில் டி.ஏ.பி., உரத்தை இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு, 25 கிலோ டி.ஏ.பி., உரம் வழங்கப்படும். அதற்கான மானியத்தை பெற,

வங்கி கணக்கு புத்தக நகலுடன், வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி, ஹெக்டேருக்கு, 650 ரூபாய் மானியம் பெற்று கொள்ளலாம்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

பெரியாறு பாசனத்தில் தண்ணீர் கிடைக்காமல் இருபோக சாகுபடி கடைமடை பகுதியில் 3 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் பாதிப்பு: ஆட்சியரிடம் விவசாயிகள் புகார் பெரியாறு பாசன இருபோக சாகுபடி கடைமடை பகுதிக்கு தண்ணீர் திறக்காததால் 3 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் ஆட்சியரிடம் புகார் தெரிவித்தனர்.

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் கே.வேலுச்சாமி, வேளாண் இணை இயக்குநர் சாரநாத்பாபு, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் எஸ்.ஆர்.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெரியாறு பாசனத் திட்டத்தில் மதுரை மாவட்டத்தின் வடக்கு, கிழக்கு மற்றும் வாடிப்பட்டி வட்டங்களில் உள்ள 45 ஆயிரம் ஏக்கர் இருபோக சாகுபடி பகுதிக்கு சுழற்சி முறையில் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதில் கடைமடையில் இருக்கக் கூடிய சிட்டம்பட்டி, ஆண்டார்கொட்டாரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்க வில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

அவர்கள் கூறியது: ஒவ்வொரு பகுதிக்கும் 6 நாள்கள் எனக் கணக்கிட்டு பொதுப்பணித் துறையினர் தண்ணீர் வழங்குகின்றனர். இதில் 9ஆவது

கால்வாய்க்குள்பட்ட கடைமடை பகுதியான சிட்டம்பட்டி, ஆண்டார்கொட்டாரம் ஆகிய பகுதிகளில் 5 நாள்கள் முடிந்து விட்ட நிலையில் இன்னும் தண்ணீர் வரவில்லை. இப்பகுதியில் 3 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது. ஏக்கருக்கு ரூ.20 ஆயிரத்துக்கு மேல் செலவு செய்துள்ளோம். இப்போதைய சூழலில் இரு நாள்களுக்குள் தண்ணீர் கிடைக்கவில்லையெனில், பயிர்கள் கருகிப் போகும். எங்களது பகுதிக்குத் தண்ணீர் கிடைக்கக் கூடாது என்ற எண்ணத்தில் மடையை உடைத்து விட்டனர் என்றனர்.

இதுகுறித்து பொதுப்பணித் துறை அலுவலர்களிடம் விளக்கம் கேட்ட ஆட்சியர் சுப்பிரமணியன், அவர்களைக் கடிந்து கொண்டார். அனைத்து விவசாயிகளுக்கும் சமமாகப் பாசன நீரைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார். மடை மற்றும் கால்வாய் ஷெட்டர்களைப் பராமரிக்கும் ஊழியர்களை இரவு நேரங்களில் ரோந்து சென்று கண்காணிக்க உத்தரவிட்டார். கள்ளிக்குடி ஒன்றியம் குராயூர் கண்மாய் ஆக்கிரமிப்பு தொடர்பாக கடந்த கூட்டத்தில் புகார் தெரிவித்தும், நடவடிக்கை இல்லை என விவசாயிகள் சங்கத்தினர் கூறினர். வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் அமைதிக் கூட்டம் நடத்தி, ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் தெரிவித்தார்.

மேலும் வண்டல் எடுப்பதாகக் கூறி கண்மாய்களில் இருந்து அளவுக்கு அதிகமாக மண் எடுத்துச் செல்லப்படுகிறது. இதைத் தடுக்க வேண்டும் என புகார் தெரிவிக்கப்பட்டது. அதிகமாக மண் எடுத்துச் செல்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் உறுதி அளித்தார்.

**பால் கூட்டுறவு சங்கங்களில் ஆவின் தயாரிப்புகள் விற்பனை**

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பேசிய விவசாயிகள், ஆவின் நிர்வாகம் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவைக் குறைத்து வருகிறது. இதனால்

விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இருப்பு வைக்கப்படும் பாலில் சற்று அதிக அளவு, உபபொருள்கள் தயாரிப்பதன் மூலம் விவசாயிகளிடம் முழுமையாக கொள்முதல் செய்ய முடியும். இவற்றை அனைத்து பால் பூத்துகளிலும் விற்பனைக்கு அனுப்பினால், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் தேக்கமடைவதைத் தவிர்க்கலாம் என்றனர். இதற்குப் பதில் அளித்த ஆவின் அலுவலர்கள், மதுரை ஆவினில் 2.72 லட்சம் லிட்டர் பால் இருப்பு வைப்பதற்கான வசதி உள்ளது. அதன் அடிப்படையிலேயே கொள்முதல் செய்து வருகிறோம் என்றனர். நெய், பால் பவுடர் போன்ற உபபொருள்களை அனைத்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஆவின் அலுவலர்களை, ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

**விலை கிடைக்காமல் நிலக்கடலை விவசாயிகள் வேதனை**

ஆண்டிபட்டி பகுதியில் நிலக்கடலையில் நோய் தாக்குதலால் மகசூல் குறைந்துள்ள நிலையில், நிலக்கடலைக்கு போதிய விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

ஆண்டிபட்டி வட்டாரத்தில் பாலக்கோம்பை, பொம்மிநாயக்கன்பட்டி, ராஜதானி, வண்டியூர், மாயாண்டிபட்டி, முத்தனம்பட்டி, கன்னியப்பபிள்ளைபட்டி, ஏத்தக்கோயில் ஆகிய பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது.

இந்த நிலக்கடலை விதைகள் கோயமுத்தூரிலிருந்து வாங்கி வரப்பட்டு, ஜூன் மாதத்தில் விதைக்கப்படுகிறது. விதைக்கப்பட்ட நாளில் இருந்து 90-100 நாள்களில் காய்கள் பறிக்கப்படுகின்றன. இவ்வாறு விதைக்கப்பட்ட விதைகளுக்கு நோய் மற்றும் பூச்சித் தாக்குதல், களை எடுத்தல் என பல்வேறு மேலாண் முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. மேலும், பூச்சி மருந்து தாக்குதலைக் கட்டுப்படுத்த 8 முறை மருந்துகள் தெளிக்கப்படுகின்றன. இதில், ஒவ்வொரு முறை மருந்துக்கும் ரூ. 2000

முதல் ரூ. 3000 வரை செலவாகிறது. இந்நிலையில், தற்போது நிலக்கடலை செடியின் இலைகளில் மஞ்சள் நோய் தாக்கி, காய் உற்பத்தி பாதிப்படைந்துள்ளது.

இது தவிர, ஆண்டிபட்டி பகுதியில் போதிய மழை இல்லாததால், வறட்சி நிலவி வருகிறது. லாரியில் தண்ணீரை விலைக்கு வாங்கி பயிர்களைக் காப்பாற்றி, எஞ்சியுள்ள நிலக்கடலைகளை பறித்து வருகின்றனர். ஆனால், இவற்றுக்கு போதிய விலை கிடைக்கவில்லை எனவும், நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்த விவசாயத் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

இது குறித்து, ராமசாமி என்ற விவசாயி கூறியது: கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பட்டத்தில் நிலக்கடலை விவசாயம் செய்து வருகிறோம். கடந்தாண்டு பச்சைக் கடலை கிலோ ரூ. 20-25 வரை விற்பனையானது. தற்போது, கிலோ ரூ. 13-15-க்கு விற்கப்படுகிறது. பதப்படுத்தப்பட்ட காய்கள் கிலோ ரூ. 20-25 வரை விற்பனையாகிறது. இதனால், பூச்சி மருந்து தெளித்தல், களை எடுப்பு கூலி ஆகியவற்றை சரிகட்டக் கூட விலை கிடைக்கவில்லை. எனவே, நிலையான விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

**விருதுநகர் மாவட்டத்தில் பார்த்தீனியத்தை ஒழிக்க விவசாயிகளுக்கு இலவச தக்கைப்பூண்டு விதைகள்: ஆட்சியர் வே.ராஜாராமன்**

விருதுநகர் மாவட்டத்தில் தென்னை மற்றும மாந்தோப்புகளில் பார்த்தீனியச் செடிகளை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு தக்கைப்பூண்டு விதைகளை வேளாண்மைத்துறை மூலம் விலையில்லாமல் வழங்க இருப்பதாக ஆட்சியர் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு

ஆட்சியர் வே.ராஜாராமன் தலைமை வகித்தார். வேளாண்மைத்துறை இணை இயக்குநர் கனகராஜன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசுகையில், தென்னை, மாந்தோப்புகளில் தக்கைப்பூண்டு விதைப்பதன் மூலம் பார்த்தீனியச் செடிகளை கட்டுப்படுத்தலாம் என்பதால், இந்த விதைகளை விவசாயிகளுக்கு விலையில்லாமல் வழங்க வேண்டும். நவீன வேளாண் கருவிகளை இயக்கத் தேவையான பயிற்சியை விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும்.தோட்டக்கலை துறை மூலம் ஒட்டு மாங்கன்றுகள், மினி கொய்யா, குழித்தட்டு முறையில் மிளகாய், தக்காளி, கத்தரி போன்ற வீரிய ரக கன்றுகள் மற்றும் பப்பாளி மரக்கன்றுகள் ஆகியவைகளை குறிப்பிட்ட பருவத்தில் நடுவதற்கு வழங்க வேண்டும்.

கரும்பு விவசாயிகளிடம் கொள்முதல் செய்த நாளிலிருந்து குறிப்பிட்ட நாள்களுக்குள் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். காலதாமதம் ஏற்பட்டால் வட்டித் தொகை கணக்கிட்டு வழங்க வேண்டும். வேளாண் கருவிகளான டிராக்டர், மினி டிராக்டர், ஆயில் என்ஜின் மோட்டார் ஆகியவைகளை மானிய விலையில் அளிக்க வேண்டும் என்றனர்.

இதற்கு பதிலளித்து ஆட்சியர் வே.ராஜாராமன் பேசுகையில், தக்கைப்பூண்டு விதைகளை விலையில்லாமல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாய சாகுபடியை அதிகரிக்கும் வகையில் நவீன வேளாண்மை கருவிகளை இயக்குவது தொடர்பாக கிருஷ்ணன்கோவில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செய்முறை பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் மழை தொடங்குவகற்கு முன்பே நீர் தேங்கும் வகையில் கண்மாய்களில் மராமத்து பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். தோட்டக்கலைத்துறை மூலம் செயல்முறை பண்ணையம் அமைத்து, செய்முறை பயிற்சி குறித்த விளக்கம் அளிக்கப்படும். ஏற்கனவே கரும்பு அரவை ஆலைகள் தொகை வழங்க காலதாமதம்

ஆனதால் அதற்கான வட்டியுடன் வழங்க ஆலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய கால்நடை அபிவிருத்தி திட்டம் மூலம் 22 ஆயிரம் அகத்தி, கொடுக்காபுளி, சரக்கொன்றை. பூவரசு ஆகிய மரக்கன்றுகள் தீவனத்திற்கு பயன்படுத்துவதற்காக மேய்ச்சல் நிலங்களை கண்டறிந்து நடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்துக்குமரன், நேர்முக உதவியாளர்(விவசாயம்) செல்வம், விருதுநகர் மாவட்ட வன உயிரின காப்பாளர் அசோக்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் குருமூர்த்தி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**இயந்திர நெல் நடவு செய்ய அரசு மானியம்**

ராஜபாளையம் வட்டாரத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பாய் நாற்றங்கால் அமைத்து இயந்திர நடவு செய்வதற்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது.

ராஜபாளையம், வடக்கு வெங்காநல்லூர், சேத்தூர், தேவதானம் பகுதிகளில் பாய் நாற்றங்கால் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நடவு இயந்திரம் மூலம் 14 முதல் 17 நாட்கள் ஆன இளவயது நாற்றுகளை நடுவதனால் பக்க தூர்கள் அதிகம் கட்டி ஏக்கருக்கு 5 முதல் 8 மூட்டைகள் வரை அதிக மகசூல் பெற முடியும்.

நெல் இயந்திரம் மூலம் நடவு செய்த விவசாயிகள் அனைவருக்கும் ஹெக்டேருக்கு பின்னேற்பு மானியமாக ரூ.3000ம், பயறு சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு ரூ.4000 மதிப்பிலுள்ள விதைகள் மானியமாக வழங்கப்படுகிறது. பின்னேற்பு மானியம் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரையோ அல்லது வேளாண்மை விரிவாக்க மையத்தையோ தொடர்பு கொள்ளலாம் என

ராஜபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**வடகிழக்கு பருவமழை: முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க ஆட்சியர் உத்தரவு**

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு ஆட்சியர் எஸ்.பிரபாகர் உத்தரவிட்டுள்ளார்.

வடகிழக்கு பருவமழை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த முன்னேற்பாடு கூட்டம், ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, தலைமை வகித்து ஆட்சியர் பி.சங்கர் பேசியதாவது: ஈரோடு மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் ஏற்படும் பேரிடர் தொடர்பாக விவரங்களைத் தெரிவிக்க ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்பு எண்கள் 0424-2260211, எஸ்.எம்.எஸ்., தெரிவிக்க 78069 17007 என்ற எண்ணை பயன்படுத்தலாம். 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும் பேரிடர் விவரங்களைத் தெரிவிக்கலாம். வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் எடுக்கப்பட வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து, அந்தந்த அதிகாரிகள் தங்கள் எல்லைக்கு உள்பட்ட அனைத்து துறை அலுவலர்களைக் கொண்டு எடுக்கப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து உடனடியாக கூட்டம் ஏற்பாடு செய்து நடத்த வேண்டும். வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை, மின்சார வாரியம், வளர்ச்சித் துறை அலுவலர்கள் வடகிழக்கு பருவ மழையினால் ஏற்படும் பேரிடர்களை உடனுக்குடன் ஆட்சியர், சார்பு துறைகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு இரவில் சுழற்சி முறையில் பணிபுரிய பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும்.

மேலும், பேரிடர் காலங்களில் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்த ஒத்திகை நிகழ்ச்சிகளை, பொதுமக்கள் கூடும் இடங்களில் மேற்கொள்ள வேண்டும் என்றார். இக்கூட்டத்தில், அனைத்துத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

**வெல்லம் தயாரிப்பில் சர்க்கரை கலப்பதை தடுத்து நிறுத்த வேண்டும்**

பரமத்தி வேலூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்கக் கூட்டத்தில், வெல்லம் உற்பத்தியின் போது சர்க்கரை (அஸ்கா) மற்றும் நச்சுப் பொருள்கள் கலப்பதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், கரும்பு விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம் ஜேடர்பாளையம் பயணியர் மாளிகையில் நடைபெற்றது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க வட்டார உதவி செயலர் சுப்பையன் தலைமை தாங்கினார். வட்டாரத் தலைவர் குழந்தைவேல், வட்டாரச் செயலர் கிருஷ்ணன், உதவித் தலைவர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயற்குழு உறுப்பினர் தங்கமணி கோரிக்கைகள் குறித்து விளக்கி பேசினார். மாவட்டத் தலைவர் ஆதிநாராயணன், மாநில கரும்பு விவசாயிகள் சங்க துணைத் தலைவர் நல்லாகவுண்டர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு பேசினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: வெல்ல உற்பத்தியின் போது கரும்புச் சாற்றில் சர்க்கரையை கலப்பதால் ஏற்படும் விலை வீழ்ச்சி மற்றும் நச்சு பொருள்கள் கலப்பதை, மாவட்ட நிர்வாகம் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். தமிழக அரசு கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.3,600 என விலை நிர்ணயம் செய்ய வேண்டும். ஜேடர்பாளையம் பகுதி விவசாயிகளின் கரும்பை, சேலம் மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை கொள்முதல் செய்ய நடவடிக்கை

எடுக்க வேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சியரிடம் வரும் 25-ஆம் தேதி கரும்பு விவசாயிகள் மனு அளிப்பது.

இதுகுறித்து 15 நாள்களுக்குள் மாவட்ட நிர்வாகம் கரும்பு விவசாயிகளின் பிரச்னையில் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், பிலிக்கல்பாளையத்தில் உள்ள விவசாயிகள் வெல்லம் கூட்டுறவு சங்கத்தை முற்றுகையிட்டு, காத்திருக்கும் போராட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், ஜேடர்பாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாய சங்க உறுப்பினர் முத்துசாமி நன்றி கூறினார்.

**"உடைந்த முட்டைகளை பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டும்'**

உணவகங்கள், பேக்கரிகளில் உடைந்த முட்டைகளைப் பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டும் என முட்டை விற்பனையாளர்கள் மாவட்ட உணவுப் பாதுகாப்பு அலுவலரிடம் வெள்ளிக்கிழமை மனு அளித்தனர்.

இது தொடர்பாக சேலம் முட்டை விற்பனையாளர்கள் நலச் சங்கத் தலைவர் கே.ஜே.ராஜகோபாலன் தலைமையில் செயலர் சுந்தரராஜு உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்டோர் சேலம் மாவட்ட உணவுப் பாதுகாப்பு அலுவலரிடம் அளித்த மனுவின் விவரம்: நாமக்கல், ராசிபுரத்திலிருந்து சேலம் மாவட்டத்துக்கு நாள்தோறும் சுமார் 4 லட்சம் முட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இதில் பேருந்து, ஆட்டோ, இரு சக்கர வாகனங்கள் முலம் நாள்தோறும் சுமார் 20 ஆயிரம் உடைந்த முட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. உடைந்த முட்டைகளை சாலையோரக் உணவகங்கள், பேக்கரி கடைக்காரர்கள் வாங்கி உபயோகப்படுத்துகின்றனர். உடைந்த முட்டையை ஒரு

நாளுக்குள் பயன்படுத்தினால் உடலுக்கு தீங்கு இல்லை. ஆனால், ஒரு வாரத்துக்கு முன்பு உடைந்த முட்டைகளையே விற்பனை செய்கின்றனர். இந்த முட்டைகளின் வழியே நச்சுக் கிருமிகளும், தூசுகளும், பூச்சிகளும் உள்நுழைய வாய்ப்புகள் அதிகம். இந்த முட்டைகளை உபயோகப்படுத்தி தயாரிக்கப்படும் உணவுப் பொருள்களை மனிதர்கள் சாப்பிடும் போது, அவர்களுக்கு வாந்தி, மயக்கம், தலைச்சுற்றல் உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்படும். இது தவிர டெங்கு, பன்றிக் காய்ச்சல்களும் ஏற்பட வாய்ப்புள்ளன. சில வியாபாரிகள் உடைந்த முட்டைகளை விற்பனை செய்வதால், நல்ல முட்டைகளை விற்பனை செய்யும் முட்டை விற்பனையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் அவப்பெயர் ஏற்படுகிறது. எனவே, இது குறித்து நடவடிக்கை எடுத்து உடைந்த முட்டைகளை விற்பனை செய்வதையும், பயன்படுத்துவதையும் தடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவைப் பெற்றுக் கொண்ட உணவுப் பாதுகாப்பு அலுவலர் டி.அனுராதா, இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

**விவசாயிகளுக்கு பயிறு அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி பயிற்சி**

புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இணைந்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாமை அன்னவாசல் வட்டாரத்தில் அண்மையில் நடத்தின.

மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ், பயிறு அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி மற்றும் மதிப்பு கூட்டுதல் பயிற்சி மாவட்ட அளவில் 80 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

இலுப்பூரில், துணை இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் (வணிகம்) தலைமையில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஒரு நாளில் 40 விவசாயிகள் வீதம் 2 நாள்களில் 80 விவசாயிகளுக்கு பயிற்சி

அளிக்கப்பட்டது. பயிற்சியில், விவசாயிகளுக்கு உளுந்தம் கஞ்சி தயாரித்தல் மற்றும் வேகவைத்த மதிப்பு கூட்டிய பச்சைபயறு தயாரிப்பு முறையை வம்பன் வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் கீதா, மதியழகன் ஆகியோர் செயல்விளக்கம் அளித்தனர்.

**தஞ்சையில் செப். 25-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 25-ஆம் தேதி ஆட்சியரக கூட்ட அரங்கில் காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

கூட்டத்தில், விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்கள் குறித்த திட்ட விளக்கம் அளிக்கப்படவுள்ளது. கூட்டத்தில் கலந்து கொள்ளும் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் அனைவரும் விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கலாம். கூட்டத்தில் கருத்து தெரிவிக்க விரும்புவோர் தங்கள் பெயர், ஊர் மற்றும் வட்டாரத்தை காலை 9 மணி முதல் 10 மணி வரை, ஆட்சியர் அலுவலக கணினியி0ல் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வட்டாரத்திற்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல் இரண்டு பேர் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவர்.

மேலும், விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவு செய்து, ஒப்புதல் பெற்ற பின்னரே மனுக்களை அளிக்க வேண்டும் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**கல்வியுடன், காய்கனி விவசாயமும் கற்றுத் தரும் பள்ளி**

சீர்காழியில் தனியார் பள்ளி மொட்டை மாடியில் காய்கறித் தோட்டம் அமைத்து மாணவ, மாணவிகளுக்குக் கல்வியுடன் இயற்கை வழி வேளாண்மை குறித்தும் கற்பிக்கப்படுகிறது.

சீர்காழியில் இயங்கி வரும் சபாநாயக முதலியார் இந்து மெட்ரிக் பள்ளியில் தற்போது, கல்வியுடன் விவசாயமும் கற்பிக்கும் புதிய முயற்சி

தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக பள்ளியில் மொட்டை மாடியில் 30 அடி நீளம், 20 அடி அகலம் கொண்ட பரப்பில், காலி நைலான் சாக்கு மூட்டைப்ளை பரப்பி அதன் மீது மண் நிரப்பி, அவரை, வெண்டை, கொத்தவரை, முள்ளங்கி, சேனைக் கிழங்கு உள்ளிட்ட காய்கனி வகை செடிகள் வளர்க்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் உள்ள மரங்களிலிருந்து கிடைக்கும் காய்ந்த சருகுகள், பசுந்தாள், தொழு உரம் ஆகியவை சேகரிக்கப்பட்டு அவை மொட்டை மாடி காய்கறி தோட்டங்களுக்கு உரமாகப் பயன்படுத்தப்படுவது கூடுதல் சிறப்பு.

இந்த மொட்டை மாடி காய்கனி தோட்டத்தில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் அவரைக்காய் 5 கிலோ வரை அறுவடை செய்யப்படுகிறது. 2 தினங்களுக்கு ஒரு முறை 5 கிலோ கொத்தவரங்காய்களும், 3 முதல் 5 கிலோ வரை எடையில் வெண்டைக்காய், முள்ளங்கி அறுவடை செய்யப்படுகின்றன. சேனை உள்ளிட்ட கிழங்கு வகைகள் 6 மாதங்களுக்கு ஒருமுறை அறுவடை செய்யப்படுகின்றன.வாரம் ஒரு முறை 2 மணிநேரம் மாணவ, மாணவிகளை இந்தத் தோட்டத்துக்கு அழைத்து வரப்பட்டு, காய்கனி உற்பத்தி மற்றும் இயற்கை உரப் பயன்பாடு குறித்து செயல்விளக்கம் அளிக்கப்படுகிறது.

இதுகுறித்து பள்ளி நிர்வாக அலுவலர் எம். தங்கவேலு தெரிவித்தது: இன்றைய காலக்கட்டத்தில் விளை நிலங்கள் குடியிருப்புகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இதனால் எதிர்காலத்தில் விவசாயம் பேரழிவுக்குள்ளாகும் நிலை உள்ளது. எனவே, தான் வேளாண்மையின் அவசியத்தை வருங்காலத் தலைமுறைக்கு நேரடியாக உணர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்.

இந்தத் தோட்டத்தைப் பார்வையிட்டுப் பயிற்சி பெறும் மாணவ, மாணவிகள் பலர் தங்கள் வீட்டு மேல்தளங்களிலும் தோட்டம்

அமைத்திருப்பது எங்கள் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுகிறோம் என்றார்.

**கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் ஒரே நாளில் தலா 5 அடி உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் மழையால் கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் தலா 5 அடி உயர்ந்துள்ளது. தென்மேற்கு பருவ மழை நிகழாண்டில் குறைந்ததால் திருநெல்வேலி மாவட்டத்தில் அணைகளின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. இதனால் நிகழ் கார் சாகுபடிக்கு முழுமையாக தண்ணீர் வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளது. கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் 25 அடியாக குறைந்ததால் பாசனத்திற்கு தண்ணீர் நிறுத்தப்பட்டது. இதனால் கடையம், ஆழ்வார்குறிச்சி, கீழஆம்பூர், பிரம்மதேசம், காக்கநல்லூர் பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர் கருகும் சூழல் உருவானது. இந்நிலையில் கடந்த சில தினங்களாக மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் மிதமான மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்துள்ளது. வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 5 மி.மீ., சேர்வலாறு அணையில் 2 மி.மீ., கடனாநதி அணையில் 2 மி.மீ., ராமநதி அணையில் 3 மி.மீ., குண்டாறு அணையில் 15 மி.மீ., தென்காசியில் 4.5 மி.மீ., செங்கோட்டையில் 2.1 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. நீர்வரத்து அதிகரிப்பு: நீர்பிடிப்புப் பகுதியில் நீடித்து வரும் மழையால் அணைகளின் நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1132 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 148 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 105.20 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 54 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு விநாடிக்கு 25 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 55.80 அடியாக

இருந்தது. அணையிலிருந்து 504.75 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 70.11 அடி, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 56 அடியாகவும் இருந்தது. விவசாயிகள் மகிழ்ச்சி: கடனாநதி அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 32 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 35.25 அடியாகவும் இருந்தது. கடந்த 2 தினங்களில் இவ்விரு அணைகளின் நீர்மட்டம் தலா 8 அடி உயர்ந்த காரணத்தால் ராமநதி, கருணை ஆறு பாசனத்தில் பயிர்கள் கருகும் பருவத்தில் உள்ள நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 53.99 அடி, குண்டாறு அணையின் நீர்மட்டம் 34.10 அடி, அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 56.25 அடி, வடக்குப்பச்சையாறு அணையின் நீர்மட்டம் 24 அடி, நம்பியாறு அணையின் நீர்மட்டம் 11.20 அடி, கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 14.25 அடியாகவும் இருந்தது.

**விவசாயிகளுக்கு தரமான விதைகள்: வேளாண் இயக்குநர் அறிவுரை**

திருநெல்வேலி மாவட்டத்தில், ஆய்வு செய்த வேளாண் விதைச்சான்று இயக்குநர் விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்க வேண்டும் என அதிகாரிகளை கேட்டுக் கொண்டார். வேளாண்மையில் முக்கிய இடுபொருளாக விளங்கும் விதையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு சான்று விதை உற்பத்தி, விதை சுத்திப் பணிகளை செய்ய வேண்டியது அவசியமாகும். திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண்துறை விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநர் ர. ஜெயசுந்தர் திடீர் ஆய்வு மேற்கொண்டார். திருநெல்வேலி மத்திய விதைக் கிடங்கு, விதைச் சுத்தி நிலையம் ஆகியவற்றை பார்வையிட்டு விதைச்சுத்திப் பணிகளை அவர் பார்வையிட்டார்.

அப்போது, தரமான விதை உற்பத்தியில் கலவன்களை உரிய நேரத்தில் தகுந்த முறையில் நீக்கினால் மட்டும் விதையின் தரத்தை பேண முடியும். தமிழகத்தில் நெல் சான்று விதைகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுவதால், சிறந்த முறையில் வேளாண் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே, விவசாயிகளுக்கு தரமான விதைகளை வழங்க வேண்டும் என விதைச்சான்று இயக்குநர், வேளாண் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின்போது, திருநெல்வேலி விதைச்சான்று உதவி இயக்குநர் மூ.மு. முஹம்மதுகாசிம், விதைச் சான்று அலுவலர்கள் மு. வேலுச்சாமி, பா. சிவகுருநாதன், பாளையங்கோட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் மகாலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கரும்புக்கான ஆதார விலையை செப். 30-க்குள் வழங்க வேண்டும்: ஆட்சியர் அறிவுறுத்தல்

விழுப்புரம் மாவட்டத்தில் கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு ஏற்கெனவே நடைபெற்ற முத்தரப்புக் கூட்டத்தில் தெரிவித்தவாறு கரும்புக்கான நியாயமான மற்றும் ஆதார விலையை வருகிற செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் வழங்க வேண்டும் என்று ஆட்சியர் எம்.லட்சுமி வலியுறுத்தினார்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் எம்.லட்சுமி தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் பேசிய விவசாயிகள் விவசாயத்துக்கு மின் இணைப்பு கூடுதலாக வழங்க வேண்டும். பட்டா மாற்றம் விரைவாக வழங்க வேண்டும். பதிவு செய்த விவசாயிகளுக்கு மின் இணைப்பு விரைந்து வழங்க வேண்டும். ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். மழைநீரை சேமிக்கும் வகையில் மாவட்டத்தில் உள்ள வரத்து

வாய்க்கால்களையும், ஏரிகளையும் ஆழப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து ஆட்சியர் எம்.லட்சுமி பேசியதாவது: வேளாண்மை துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2015-16ஆம் ஆண்டுக்கு முறையே 50 நெல் நடவு இயந்திரங்கள் வழங்குவதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளன. அதேபோல் உழவுக் கருவிகள் 5-ம், மினி டிராக்டர் 25-ம் வழங்குவதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் வேளாண்துறை மூலம பயனாளிகளுக்கு நடவு இயந்திரங்கள், தோட்டக்கலைத் துறை மூலம் மினி டிராக்டர், பவர் டில்லர் ஆகியவை வழங்கப்பட்டன.

2014-15ஆம் ஆண்டு தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு அரவைப் பருவத்தில் முதன்மை கரும்பு அரவைக்கு கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு ஆகஸ்ட் 11ஆம் தேதி நடைபெற்ற முத்தரப்புக் கூட்டத்தில் தெரிவித்தவாறு கரும்புக்கான நியாயமான மற்றும் ஆதார விலையை செப்டம்பர் 30-ம் தேதிக்குள் வழங்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பிருந்தாதேவி, ஆட்சியர் (பயிற்சி) ஜெயசீலன், வேளாண்மை இணை இயக்குநர் ரத்தினசபாபதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஆறுமுகம், மின்சார வாரிய கண்காணிப்புப் பொறியாளர் பி.வி.சுந்தரம், கள்ளக்குறிச்சி செயற்பொறியாளர் சிவராஜ், விழுப்புரம் செயற்பொறியாளர் சண்முகம், முன்னோடி வங்கி மேலாளர் ராஜேந்திரன், அரசுத் துறை அலுவலர்கள், விவசாயப் பிரதிநிதிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## தமிழக அரசு ரூ.605 கோடி ஒதுக்கியது கூவம் நதியை சீரமைக்க திட்டம் ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்



சென்னை,

தமிழக அரசு நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

**கூவம் நதி சீரமைப்பு திட்டம்**

தமிழக அரசு, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள நீர் நிலைகளை சீரமைத்திட அனைத்து சார் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றும் பணியை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் மேற்கொண்டுவருகிறது. கூவம் நதியை முழுமையாகச் சீரமைத்து மீட்டெடுப்பதற்கான ஒரு பெரும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தை, ‘சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை’ ஒருங்கிணைப்பு அமைப்பாக இருந்து செயல்படுத்தும் என்று 2014- 2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசால்

அறிவிக்கப்பட்டது.

அதன்படி கூவம் நதியை முழுமையாகச் சீரமைத்திட ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டப்பணிகள் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ளது. முதற்கட்டமாக முதல் 3 ஆண்டுகளில் குறுகியகால திட்டமாக 60 துணைதிட்டங்களும், இரண்டாம் கட்டமாக 4 முதல் 8 ஆண்டுகளில் 7 துணைதிட்டங்களும், மூன்றாம் கட்டமாக சீரமைப்புப்பணிகள் முடிவடைந்தவுடன் பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மொத்தமதிப்பு 1,934 கோடியே 84 லட்சம் ரூபாய் ஆகும்.

**ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்**

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தின் முக்கிய நோக்கம், கழிவுநீர் கூவம் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்தல், திடக் கழிவு மேலாண்மை, நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்தி பராமரித்தல், கூவம் நதிக் கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுக் கான திட்டமிடல், பல்லு யிர் பெருக்கத்தை மீட்டு சுற்றுச்சூழலை மேம்படுத்தி நகர்ப்புறங்களில் நதியின் கரையோரங்களில் வளர்ச்சிப்பணிகளை மேற்கொள்ளுதல் ஆகும்.

கூவம் நதியின் சீரமைப்பு பணிக்காக மூன்று ஆண்டுகளில் குறுகியகால திட்டமான 60 துணைதிட்டங்களை செயல்படுத்திட தமிழக அரசு 604 கோடியே 77 லட்சம் ரூபாய் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் ஆவடி அருகேயுள்ள பருத்திப்பட்டு அணையிலிருந்து கூவம் முகத்துவாரம் வரையிலான 27.3 கிலோமீட்டர் நீளமுள்ள கூவம் நதிப்பகுதிகளை சீரமைத்திட 604 கோடியே 77 லட்சம் ரூபாய் செலவிலான ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்திற்கு முதல்- அமைச்சர் ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்.

**கட்டிடங்கள் திறப்பு**

மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று

வாரியத்தால் கோயம்பேட்டில் நாளொன்றிற்கு 120 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட 87 கோடியே 35 லட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்; சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுவாரியத்திற்கு 19 கோடியே 62 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள 82 அலுவலக கட்டிடங்கள்; சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் 58 பணிமனை அலுவலகங்கள் மற்றும் சென்னை மாநகராட்சி 20 கோட்ட அலுவலங்களில் 3 கோடியே 22 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 78 பொது வரிவசூல் மையங்கள் என மொத்தம் 110 கோடியே 19 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டிடங்களை ஜெயலலிதா திறந்துவைத்தார்.

**ரூ.719 கோடியே67 லட்சம் திட்டங்கள்**

சென்னை, மீனம்பாக்கத்தில் சுமார் ஐந்தாயிரம் பொதுமக்கள் பயனடையும் வகையில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் 59 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் மற்றும் 4 கோடியே 11 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பாதாளசாக்கடை திட்டப்பணிகள் என மொத்தம் 4 கோடியே 70 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளை ஜெயலலிதா தொடங்கி வைத்தார். ஜெயலலிதா அடிக்கல் நாட்டியும், திறந்தும், தொடங்கியும் வைத்த திட்டங்களின் மொத்த மதிப்பு 719 கோடியே 67 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**காவிரி டெல்டா பகுதியில் சம்பா சாகுபடிக்கு முறைப்பாசனம் அமல்படுத்தப்படுமா? விவசாயிகளிடம் கருத்துக்கேட்க கலெக்டர் உத்தரவு**



கடலூர்

காவிரி டெல்டா பகுதியில் சம்பா சாகுபடிக்கு முறைப்பாசனம் அமல்படுத்துவது பற்றி விவசாயிகளிடம் கருத்துக்கேட்குமாறு பொதுப்பணித்துறை பொறியாளர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

குறைகேட்புக்கூட்டம்

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் எஸ்.சுரேஷ்குமார் தலைமையில் நேற்று நடந்தது. மாவட்ட வருவாய் அதிகாரி விஜயா, வேளாண்மை இணை இயக்குனர் தனசேகரன், துணை இயக்குனர் டாக்டர் இளங்கோ, சேத்தியாத்தோப்பு சர்க்கரை ஆலை தனி அலுவலர் சுப்பிரமணியன்,

நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்ட விவரம் வருமாறு:–

ரவீந்திரன்:–காவிரி டெல்டா பகுதியில் சம்பா சாகுபடிக்கு தண்ணீர் வழங்க இயலுமா? இயலாதா? என்பது பற்றி தெரிவிக்க வேண்டும். இப்பிரச்சினை அரசியலாக்கப்பட்டு விட்டதால் தண்ணீர் வரும் என்ற நம்பிக்கை இல்லை. கிடைக்காத காவிரி தண்ணீரை நம்பி விவசாயம் செய்வதை விட, கிடைக்கிற மழைநீரை சேமித்து வைத்து விவசாயம் செய்வது என்பது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும்.

<u>கரும்பு நிலுவைத்தொகை</u>

குஞ்சிதபாதம்:–சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்த கரும்புக்குரிய நிலுவைத்தொகையை வழங்க வேண்டும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அதிகாரி:–விவசாயிகளுக்கு 5 கோடியே 96 லட்சம் ரூபாயை ஓரிருநாளில் வழங்கப்போகிறோம். இத்தொகை 980 விவசாயிகளின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும். இதற்காக மத்திய கூட்டுறவு வங்கியிடம் 3 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறோம்.

உலகநாதன்:–2014–15–ம் அரவை பருவத்தில் ஆலையை ஒரு மாதம் நிறுத்தி விட்டு, 52 ஆயிரம் டன் கரும்பை மதுராந்தகம் ஆலைக்கு அனுப்பியதால் போக்குவரத்துச்செலவு மற்றும் சுங்கக்கட்டணமாக 2 கோடியே 38 லட்சம் ரூபாயை செலவு செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியிருக்கிறீர்கள், இதை செய்யாதிருந்தால், மத்தியகூட்டுறவு வங்கியிடம் இருந்து கடன் வாங்கும் அவசியம் ஏற்பட்டிருக்காது

<u>முறைப்பாசனம்</u>

கார்மாங்குடி வெங்கடேசன்:–தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் கடன் வாங்கி திருப்பி செலுத்திய பின்னரும், ஜாமீன்தாரர் கடனுக்காக எனது சொத்துபத்திரங்களை வங்கி நிர்வாகம் திருப்பித்தர மறுக்கிறது. இது எந்தவிதத்தில் நியாயம்.(அவரது கருத்தை ஆதரித்து பலவிவசாயிகள் பேசினார்கள்)

முன்னோடி வங்கி மேலாளர் ஆண்ட்ரூஸ்:–வங்கியின் சட்டதிட்டத்தில் உள்ளதைத்தான் வங்கிகள் செயல்படுத்துகின்றன.

மாதவன்:–வீராணம் ஏரியில் இருந்து சென்னைக்கு குடிநீர் அனுப்புவதற்கு கொடுக்கிற முக்கியத்துவத்தை பாசனத்துக்கும் வழங்க வேண்டும்.

கலெக்டர்:–வீராணம் மற்றும் கீழணையில் இருந்து பாசனத்துக்கு முறைவைத்து தண்ணீர் கொடுக்கலாமா? என்பது பற்றி விவசாயிகளிடம் கருத்துக்கேட்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அன்பழகன்:–கோட்லாம்பாக்கம் பெரிய ஏரியை தூர்வாரவேண்டும் என்று பலமுறை முறையிட்டும் இதுவரை தூர்வாரப்படவில்லை. ஆனால் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியதாக தாசில்தார் எழுத்துப்பூர்வமாக பொய்யான தகவலை தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக விசாரிக்க வேண்டும்.

கலெக்டர்:–உதவி கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்வார்.

<u>சைமாவுக்கு அனுமதியா?</u>

புதுக்கூரைப்பேட்டை கலியபெருமாள்:–விருத்தாசலம் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் 450 அடிக்கு கீழே சென்று விட்டது. இப்படியே போனால் இன்னும் 2 ஆண்டுகளில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும். எனவே மழைநீரை சேகரிக்க மணிமுக்தாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும்.

செந்தாமரைக்கண்ணன்:–மாசுகட்டுப்பாட்டுவாரியத்தின் செயல்பாடுகள் மிகவும் மோசமாக உள்ளது. பச்சையாங்குப்பம், செம்மங்குப்பம், குடிகாடு பகுதியில் நிலத்தடி நீர் மாசுபட்டு விட்டது. தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை இழப்பீடு கிடைக்கவில்லை.

ரவீந்திரன்:–பெரியப்பட்டில் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் எடுக்க ‘சைமா’ நிறுவனத்துக்கு அனுமதி வழங்கியிருக்கிறீர்களா

இல்லையா? இதுதொடர்பாக உதவிகலெக்டர் நடத்திய பேச்சுவார்த்தையின் போது ஆவணங்களை வழங்குவதாக ‘சைமா’ நிறுவனம் கூறியும் இதுவரை வழங்காதது ஏன்?

மாவட்ட வருவாய் அதிகாரி:–இதுதொடர்பாக உதவி கலெக்டர் மீண்டும் கூட்டம் நடத்தி ஆவணங்களை வாங்க நடவடிக்கை எடுப்பார். இவ்வாறு விவசாயிகள் எடுத்துக்கூறினார்கள்.

கூட்டத்தில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் வசந்த், உதவி கலெக்டரின் நேர்முக உதவியாளர்கள் செழியன், ஜான்சிராணி, வேளாண்மை துணைஇயக்குனர் அருள்பிரகாசம், வேளாண்மை விற்பனைக்குழு செயலாளர் சுரேஷ், வேளாண்மை அலுவலர் பூராகவன், நிலஅளவைத்துறை ஆய்வாளர் ரத்தினவேல் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

<u>நிலஅளவைத்துறை மீது விவசாயிகள் புகார்</u>

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக்கூட்டத்தில் நிலஅளவைத்துறையின் செயல்பாடுகள் பற்றி விவசாயிகள் விமர்சித்தனர். விருத்தாசலம் விவசாயி குப்புசாமி கூறுகையில், விருத்தாசலம் தாலுகா அலுவலகத்தில் நில அளவைத்துறையின் செயல்பாடு மிகவும் மோசமாக உள்ளது. நிலத்தை அளக்க வந்தால் மாமூல் கேட்கிறார்கள் என்றார்.

குணமங்கலம் ரமேஷ் பேசுகையில், விவசாயி ஒருவர் பட்டாமாற்றம் செய்யக்கேட்டு 4 முறை மனுக்கொடுத்தும் இதுவரை பட்டா மாற்றம் செய்துதரப்படவில்லை இதுபோன்று பல முறைகேடுகள் நடக்கிறது என்றார்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் தண்ணீர் இன்றி பாதித்த நெற்பயிரை கலெக்டருடன் காண்பித்த விவசாயி முட்டம் கால்வாயில் முறையாக தண்ணீர் திறந்து விடக்கோரிக்கை**



நாகர்கோவிலில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில், தண்ணீர் இன்றி பாதித்த நெற்பயிரை கலெக்டர் சஜ்ஜன்சிங் சவானிடம் விவசாயி காண்பித்தார். அப்போது முட்டம் கால்வாயில் முறையாக தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

<u>விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்</u>

குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாகர்கோவில் கலெக்டர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் தலைமை தாங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

குமரி மாவட்டத்தில் இந்த ஆண்டு 6472 எக்டேரில் கன்னிப்பூ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதம் அறுவடைப்பணி முடிந்துள்ளது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொள்முதல் செய்ய 6 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் போதுமான விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. புத்தேரி, தென்தாமரைக்குளம் பகுதிகளில் மழையால் தேங்கிய தண்ணீர் வடிந்து விட்டது.

இவ்வாறு கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் கூறினார். பின்னர் விவசாயிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கூறி பேசினர். அப்போது அவர்கள் கூறியதாவது:–

<u>ரூ.3 ஆயிரம் வாடகை வசூல்</u>

வருவாய்த்துறை நில அளவை சர்வேயர்கள் 78 பேர் இருக்க வேண்டும். ஆனால் 15 பேர்தான் இருக்கிறார்கள். இதனால் ஆக்கிரமிப்பு நிலங்களை அளக்க, ஆவணங்கள் தர சர்வேயர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் நிலத்தை சப்–டிவிசன் செய்ய, பட்டா மாறுதல் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே தேவையான சர்வேயர்களை நியமிக்க வேண்டும்.

குமரி மாவட்டத்தில் 6 நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தாலும், ஈரப்பதம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களைக்கூறி ஒரு கிலோ நெல்கூட கொள்முதல் செய்யப்படவில்லை. இந்த வாய்ப்பை பயன்படுத்தி வியாபாரிகள் மிகக்குறைந்த விலைக்கு நெல்லை கொள்முதல் செய்கின்றனர். அதேபோல் அறுவடை எந்திரங்கள் போதிய எண்ணிக்கையில் நமது மாவட்டத்தில் இல்லை. இதனால் சாதாரணமாக ஒரு மணிநேரத்துக்கு ரூ.1000 என வசூலிக்கப்பட்டு வந்த வாடகை, தற்போது ரூ.3 ஆயிரமாக வசூலிக்கப்படுகிறது.

<u>காரசார விவாதம்</u>

விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் ஏற்கனவே தெரிவித்த கோரிக்கைகளைத்தான் மீண்டும், மீண்டும் சொல்லும் நிலை உள்ளது. அதிகாரிகள் விவசாயிகள் தெரிவிக்கும் கோரிக்கைகளுக்கு சப்பைக்கெட்டு கெட்டுகிறார்களே தவிர எதுவும் நடைபெற்ற பாடில்லை. அம்மா சிறப்புத் திட்ட முகாமும், மாதந்தோறும் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டமும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுவதால் எங்களால் அம்மா சிறப்புத்திட்ட முகாமுக்கு செல்ல முடியவில்லை.

எனவே விவசாயிகள் கூட்டம் நடைபெறும் நேரங்களில் அம்மா திட்ட சிறப்பு முகாம்களை வேறு நாட்களில் மாற்ற வேண்டும்.

சாரோடு ஏலா பகுதியில் நெல், வாழை வயல்களில் மின்வாரியத்தினர் விவசாயிகளின் அனுமதியின்றி மின்பாதையை ஏற்படுத்தியுள்ளனர். அங்கு மிகவும் தாழ்வாக மின்வயர்கள் செல்வதால் அபாயகரமான நிலை உள்ளது. இதை மாற்ற வேண்டும். (இதற்கு மின்வாரிய அதிகாரி பதிலளித்து பேசும்போது, மின்வயர் அமைக்கும்போதே எதிர்ப்பு தெரிவித்திருந்தால் மாற்றியிருக்கலாம். இனிமேல் மாற்ற வேண்டுமானால் சம்பந்தப்பட்ட விவசாயி பணம் கட்டினால்தான் மாற்றியமைக்கப்படும் என்று தெரிவித்தார். உடனே விவசாயிகள் பலர் அந்த அதிகாரியிடம் காரசாரமாக விவாதித்தனர். இதனால் கூட்டத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது).

<u>விவசாயி குற்றச்சாட்டு</u>

இதற்கிடையே மூங்கில்விளையைச் சேர்ந்த கோபாலன் என்ற விவசாயி தண்ணீர் இன்றி கருகிய நெற்பயிர்களைக் கொண்டு வந்து கலெக்டர் சஜ்ஜன்சிங் சவானிடம் காட்டினார். அப்போது அவர் தங்கள் பகுதியில் 2½ ஏக்கரில் நெல் சாகுபடி செய்திருந்ததாகவும், முட்டம் கால்வாயில் முறையாக தண்ணீர் விடாததால் நெற்பயிர்கள் பால் பிடிக்காமல் பதராகிப் போனதால் தான் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும் குற்றம் சாட்டினார். முட்டம் கால்வாயில் முறையாக தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. உடனே கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான், அதிகாரிகளிடம் இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட பாசன சங்கத்தலைவர் வின்ஸ் ஆன்றோ, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) சுப்பிரமணியன், வேளாண்மைத்துறை துணை இயக்குனர் பொன்காத்த பெருமாள், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நிஜாமுதீன், விவசாய சங்கப் பிரதிநிதிகள் புலவர் செல்லப்பா, மருங்கூர்

செல்லப்பா, பத்மதாஸ், குணசேகரன், செணபக சேகரன்பிள்ளை, சதீஷ்குமார், தங்கராஜ், சண்முகம்பிள்ளை, முருகேசபிள்ளை உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**வாழை, கரும்பு பயிர்கள் கருகும் நிலையில் உள்ளதால் காவிரியில் இருந்து தொடர்ந்து தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**



கரூர்

வாழை, கரும்பு பயிர்கள் கருகும் நிலையில் உள்ளதால் காவிரியில் இருந்து தொடர்ந்து தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்து உள்ளனர்.

விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

கரூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அதிகாரி அருணா முன்னிலை வகித்தார். கூட்டம் தொடங்கியதும் விவசாயிகள்

பலர் எழுந்து கரூர் மாவட்டம், மாயனூரில் உள்ள காவிரி தடுப்பணையில் இருந்து 15 வாய்க்கால்கள் பிரிந்து செல்கிறது. இந்த வாய்க்கால் மூலம் செல்லும் தண்ணீரை பயன்படுத்தி 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயம் செய்யப்பட்டுள்ளது. இதில் கரும்பு, வாழை போன்ற ஒரு ஆண்டு பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயம் பாதிக்கும்

இந்த நிலையில் தற்போது மேட்டூர் அணையில் 72 அடி உயரம் தண்ணீர் தான் உள்ளது. 60 அடி தண்ணீர் இருப்பு வைத்துக்கொள்ளப்படும். மீதி உள்ள 12 அடி தண்ணீர் தான் திறந்து விடப்படும். இந்த நிலையில் தென்கரை வாய்க்கால் மூடப்பட உள்ளதாக தெரிகிறது. இந்த நிலை ஏற்பட்டால் தண்ணீர் இன்றி வாழை, கரும்பு பயிர்கள் கருகும் நிலை ஏற்படும். எனவே காவிரியில் இருந்து தொடர்ந்து தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே நிலைதான் அமராவதி ஆற்றிலும் உள்ளது என்று கூறினர். அதற்கு பதில் அளித்த கலெக்டர் தொடர்ந்து காவிரியில் தண்ணீர் திறந்து அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்படும் என்று கூறினார். இதைத் தொடர்ந்து தமிழக விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த பலர் எழுந்து தோகைமலை ஒன்றியம் புழுதேரி கிராமத்தில் குளிர்பான தொழிற்சாலை தொடங்கப்பட உள்ளது. இந்த தொழிற்சாலை தொடங்கினால் அந்த பகுதியில் உள்ள நிலத்தடி நீர் இன்றி விவசாயம் பாதிக்கும். மேலும் பொதுமக்கள் குடிநீர் இன்றி தவிக்கும் நிலை ஏற்படும். எனவே புழுதேரி கிராமத்தில் குளிர்பான தொழிற்சாலை அமைக்க அனுமதி வழங்க கூடாது என்று கூறினர். அப்போது கலெக்டர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

சொட்டு நீர் பாசனம் இதே போன்று காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நல சங்க துணை செயலாளர் சுப்பிரமணியம் எழுந்து கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம் தாயனூர் வரை கடைமடை பகுதிக்கு தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். அப்போது நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் பதில் அளித்தார்.

தொடர்ந்து குப்புச்சிபாளையத்தை சேர்ந்த விவசாயி எழுந்து சொட்டு நீர் பாசனம் அமைக்க அரசு மூலம் சென்றால் ரூ.8 ஆயிரம் அதிகம் செலவு ஆகிறது. ஆனால் விவசாயிகளான நாங்கள் நேரடியாக சென்றால் ரூ.8 ஆயிரத்திற்கும் குறைவாகிறது என்று கூறினார். அப்போது சம்பந்தப்பட்ட அலுவலர் எழுந்து நேரடியாக சொட்டு நீர் பாசனம் அமைத்துக்கொள்கிறோம் என்று எழுதி கொடுங்கள். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் அளித்தார்.

மதகுகளை காணவில்லை இதே போன்று விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகள் வைத்தனர். அதன் பிறகு விவசாயிகள் தங்கள் கோரிக்கை அடங்கிய மனுக்களை கொடுத்தனர். மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் நடவடிக்கை எடுப்பதாக கூறினார். தொடர்ந்து கூட்டத்தில் டாக்டர் அப்துல்கலாம் நினைவு அறக்கட்டளை இயக்குனர் நாகராஜன் எழுந்து லாலாப்பேட்டை மருதாண்டான் வாய்க்காலில் புதிய மதகுகள் அமைத்து தூர் வார வேண்டும் என்று கூறி ஒரு கோரிக்கை மனு கொடுத்தார். மேலும் தன்னை அதிகாரிகள் பலர் மிரட்டுவதாகவும் கூறி மனு கொடுத்தார். தொடர்ந்து மருதாண்டான் வாய்க்காலின் மதகுகளை 3 ஆண்டுகளாக காணவில்லை என்ற வாசகம் எழுதிய பதாகையை கையில் ஏந்திய படி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**2–வது சீசனை முன்னிட்டு ஊட்டி தாவரவியல் பூங்கா மாடத்தில் அடுக்கி வைக்கப்பட்ட மலர்கள் சுற்றுலா பயணிகள் பார்வையிட அனுமதி**



ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2–வது சீசனை முன்னிட்டு மலர்மாடத்தில் அடுக்கி வைக்கப்பட்டு உள்ள மலர்களை பார்வையிட சுற்றுலா பயணிகள் நேற்று முதல் அனுமதிக்கப் பட்டனர்.

2–வது சீசன்

நீலகிரி மாவட்டத்தில் ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் கோடைசீசனும், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் 2–வது சீசனும் நிலவுகிறது. இதனை முன்னிட்டு அதிகளவு சுற்றுலா பயணிகள் வருகின்றனர். குறிப்பாக 2–வது சீசன் காலத்தின் போது வட மாநிலங்களில் அதிகளவு திருமணங்கள் நடைபெறும். இதன் காரணமாக தேனிலவை கொண்டாட வடமாநில புதுமண தம்பதிகள் ஊட்டிக்கு அதிகமாக வருகின்றனர். இதற்காக 2–வது சீசனுக்கு தேனிலவு சீசன் என்ற பெயரும் உண்டு.

2–வது சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் சுமார் 72 ரகங்களை சேர்ந்த 2 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன. மேலும் 7 ஆயிரம் பூந்தொட்டிகளிலும் மலர்செடிகள் நடவு செய்யப்பட்டன.

சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி

தற்போது இந்த பூந்தொட்டிகளில் நடவு செய்யப்பட்ட கேலன் டூலா, அன்டிரைனம், பெட்டூனியா, பேன்சி ஆஸ்டர், டையான்தஸ், கலிபோர்னியா பாப்பி, ஸ்வீட் லில்லியம், கோச்சியா, சன் பிளவர், டாலியா, லேடிஸ் லேஸ், சப்னேரியா, கோடி ஷியா, அஜிரேட்டம், ஹெலி ஹீரைசம் உள்ளிட்ட ஏராளமான மலர்செடிகளில் பூக்கள் பூத்து உள்ளன.

இந்த பூந்தொட்டிகளை பூங்காவில் உள்ள மலர் மாடத்தில் அடுக்கும் பணி கடந்த சில நாட்களாக நடைபெற்று வந்தது. இந்த பணி நிறைவு பெற்றதை தொடர்ந்து நேற்று முதல் சுற்றுலா பயணிகள் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

மலர்மாடங்களில் பல்வேறு வண்ணங்களில் பூத்து குலுங்கும் இந்த வண்ண மலர்களை சுற்றுலா பயணிகள் மிகவும் மகிழ்ச்சியுடன் கண்டு ரசித்து செல்வதோடு, புகைப்படமும் எடுத்து மகிழ்கின்றனர்.

மேலும் அங்கு உள்ள புல்வெளியிலும் பூந்தொட்டிகள் அடுக்கி வைத்து அலங்காரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன, அதை சுற்றி கயிறுகளை கட்டி வைத்துள்ளனர். இதையும் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்கிறார்கள்.

**குன்னூர் சிம்ஸ் பூங்காவில் சுற்றுலா பயணிகளை வரவேற்கும் வண்ண, வண்ண மலர்கள்**



குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 2–வது சீசனுக்காக நடவு செய்யப்பட்ட மலர் செடிகளில் தற்போது பூக்கள் பூத்து, சுற்றுலா பயணிகளை வரவேற்கும் வகையில் காட்சி அளிக்கின்றன.

<u>சுற்றுலா தலங்கள்</u>

நீலகிரி மாவட்டத்தில் அதிகளவில் சுற்றுலா தலங்கள் உள்ளன. மாவட்ட தலைநகரமான ஊட்டியை அடுத்து குன்னூர் முக்கிய இடமாக உள்ளது. குன்னூரில் முக்கிய சுற்றுலா தலமாக தோட்டக்கலைத்துறையின் கீழ் இயங்கும் சிம்ஸ் பூங்கா விளங்குகிறது.

நூற்றாண்டு பழமை வாய்ந்த இந்த பூங்காவில் மலர் செடிகள் மட்டுமின்றி, ருத்திராட்சை மரங்கள், யானைக்கால் மரங்கள், காகித மரங்கள் உள்பட நூற்றாண்டு பழமை வாய்ந்த பல்வேறு மரங்கள் காணப்படுகின்றன.

புதிய நாற்றுகள்

ஆண்டுதோறும் மாவட்டத்தில் 2 சீசன்கள் நிலவுகின்றன. முதல் சீசன் ஏப்ரல், மே மாதங்களிலும், 2–வது சீசன் செப்டம்பர், அக்டோபர் மாதங்களிலும் நிலவி வருகிறது. இதைத்தொடர்ந்து பூங்காக்களில் சீசனுக்கு ஏற்ப மலர் நாற்றுகள் புதிதாக நடவு செய்யப்பட்டு வருகின்றன. சிம்ஸ்பூங்காவில் 2–வது சீசனுக்காக 1½ லட்சம் மலர் நாற்றுகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நடவு செய்யப்பட்டன. தற்போது அந்த மலர் செடிகளில் மலர்கள் பூத்து குலுங்குகின்றன. டேலியா, ரோஜா, மேரிகோல்டு போன்ற வகையான மலர் செடிகளில் வண்ண, வண்ண பூக்கள் மலர்ந்து சுற்றுலா பயணிகளை வரவேற்க தயாராக உள்ளன. நாளை (ஞாயிற்றுக்கிழமை) முதல் 2–வது சீசனை முன்னிட்டு அதிகளவில் சுற்றுலா பயணிகள் பூங்காவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அதிகாரிகள் கூறினார்கள்.

**வருகிற 30–ந் தேதிக்குள் கரும்புக்கான நிலுவைத்தொகையை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் கலெக்டர் உத்தரவு**



விழுப்புரம்,

வருகிற 30–ந் தேதிக்குள் கரும்புக்கான நிலுவைத்தொகையை விவசாயிகளுக்கு தனியார் சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டும் என கலெக்டர் லட்சுமி உத்தரவிட்டுள்ளார்.

குறைகேட்பு கூட்டம்

விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மாதாந்திர விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் லட்சுமி தலைமை தாங்கி விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்து மனுக்களை பெற்றார். கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கைகள் குறித்து பேசியதாவது:–

விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில் அளிக்கப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் பதில் தெரிவிப்பதில்லை. 60 நாட்கள் கழித்துதான் பதில் கூறுகிறார்கள். விழுப்புரம் மாவட்டம் விவசாயத்தை நம்பியுள்ள மாவட்டமாகும். எனவே விவசாயிகளின் பிரச்சினைக்கு உடனுக்குடன் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உயிர் காக்கும் மருந்துகள்

விவசாய வேலை முடிந்து இரவில் படுத்து தூங்கும்போது பாம்பு, தேள் கடித்து விடுகிறது. உடனே அந்த விவசாயியை அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச்சென்றால் அங்கு உயிர்

காக்கும் மருந்து இல்லை. எனவே அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உயிர் காக்கும் மருந்துகளை இருப்பு வைத்து பயன்படுத்த வேண்டும்.

திண்டிவனம் தாலுகா பாதிரி, ஓங்கூர், பரிக்கம்பட்டு, காவணிப்பாக்கம் உள்ளிட்ட ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து வரக்கூடிய வாய்க்கால்கள் தூர்ந்து போய் கிடக்கிறது. எனவே இந்த வாய்க்கால்களை தூர்வார வேண்டும். அதே நேரத்தில் பூச்சிகொளத்தூரில் தடுப்பணை கட்டினால் அதன் மூலம் ஏரிகளில் தண்ணீரை தேக்கி வைப்பதன் மூலம் 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். உணவு உற்பத்தியையும் பெருக்க முடியும்.

கல்வராயன்மலையில் 13 ஆயிரம் ஏக்கர் நிலங்களை காப்புக்காடுகளாக அறிவித்துள்ளனர். இது இந்திய வனச்சட்டத்திற்கு எதிரானது. இந்த நிலங்களை விவசாயிகள் மீண்டும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளின் பிரச்சினைகளை முழுவதுமாக அதிகாரிகள் நிறைவு செய்வது கிடையாது. அரைகுறையாக இருக்கிறது.

எப்போது நிலுவை தொகை வழங்கப்படும்

மாவட்டத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய கரும்புக்கான நிலுவைத்தொகை ரூ.200 கோடிக்கு மேல் பாக்கி உள்ளது. இதுவரை பலமுறை கூட்டம் நடத்தியும் தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர், விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யவில்லை. விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய பணத்தை எப்போது கொடுக்க போகிறார்கள் என்று கேட்டாலும் முறையான பதில் இல்லை. மாவட்ட நிர்வாகம், சர்க்கரை ஆலை முதலாளிகள் மீது நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஒவ்வொரு மாதமும் அவகாசம் கேட்கிறார்கள். ஆலை முதலாளிகளுக்கு சாதகமாக மாவட்ட நிர்வாகம் இருக்கிறதா? அல்லது விவசாயிகளுக்கு சாதகமாக இருக்கிறதா? என்றே தெரியவில்லை. இவ்வாறு அவர்கள் பேசினர்.

இதற்கு பதில் அளித்து கலெக்டர் லட்சுமி பேசுகையில், அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருந்துகளை இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். பூச்சிகொளத்தூரில் தடுப்பணை அமைப்பது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். கரும்புக்கான நிலுவைத்தொகையை விவசாயிகளுக்கு வருகிற 30–ந் தேதிக்குள் வழங்க தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி சர்க்கரை ஆலைகள், விவசாயிகளுக்கு உரிய தொகையை வழங்கி முடிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தினகரன்

**ஜெயலலிதா அறிவிப்பு : அமராவதி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**




சென்னை: தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையில் இருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய பாசன பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அமராவதி அணையில் இருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய பாசன பகுதிகளுக்கு இன்று முதல் தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 47,117 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இவ்வாறு ஜெயலலிதா கூறியுள்ளார்.

மதுரை வேளாண் கல்லூரி பொன்விழா

மதுரை, : மதுரை வேளாண்மை கல்லூரியின் பொன்விழா வரும் செப்.19, 20 ஆகிய 2 நாட்கள் நடக்கிறது.இது குறித்து கல்லூரி பழைய மாணவர்கள் சங்க தலைவர் வாசிமலை, செயலாளர் மூர் த்தி கூறுகையில், “மதுரை வேளாண்மை கல்லூரி துவங்கி 50 ஆண்டுகள் ஆவதை முன்னிட்டு பொன்விழா கொண்டாடப்படுகிறது. வரும் 19ம் தேதி காலையில் விளையாட்டு, கலைநிகழ்ச்சிகள், மரம் நடுதல் போன்ற

நிகழ்ச்சியுடன் விழா துவங்குகிறது. தொடர்ந்து மினி மாரத்தான், 50, 100 மீட்டர் ஒட் டம், கோ-கோ, செஸ், கேரம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடக்கின்றன.

இக்கல்லூரியில் படி த்தவர்கள் ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஆர்எஸ், டாக்டர்கள், விஞ்ஞானிகள் உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் உள்ளனர். வெளிநாடுகளிலும் வேலை பார்க்கின்றனர். முன்னாள், இன்னாள் மாணவ-மாணவிகளை இணைக்கும் விதமாக விழா நடத்தப்படுகிறது. 2ம் நாளான 20ம் தேதி, கல்லூரியில் படி த்து உயர்பதவியில் உள்ள பழைய மாணவர்களும் பங்கேற்கின்றனர். இவர்களில் வசதி படைத்தவர்கள் இன்னாள் மா ணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குகின்றனர். மேலும் எதிர்காலம் என்ன செய்யலாம் என்பது குறித்த அறிவுரைகளை வழங்குகின்றனர் என்றனர். பேட்டியின் போது மார்க்கெட் கமிட்டி உதவி இயக்குனர் தவசுமுத்து, ஒருங்கிணைப்பாளர் நிர்மல்ராஜ் உடனிருந்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**ரூ.1,935 கோடி செலவில் கூவம் நதி சீரமைப்பு திட்டம்_: முதல்வர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார்**



கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்துக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் ஆவடி அருகேயுள்ள பருத்திப்பட்டு அணையிலிருந்து கூவம் முகத்துவாரம் வரையிலான 27.3 கி.மீ. நீளமுள்ள கூவம் நதிப் பகுதிகளை சீரமைக்க ரூ.604 கோடியே 77 லட்சம் செலவிலான ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்துக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

இத்திட்டப் பணிகள் 3 கட்டங்களாக செயல்படுத் தப்பட உள்ளன. முதல்கட்ட மாக முதல் 3 ஆண்டுகளில் 60 துணை திட்டங்களும், இரண்டாம் கட்டமாக 4 முதல் 8 ஆண்டுகளில் 7 துணை திட்டங்களும், மூன்றாம் கட் டமாக சீரமைப்புப் பணிகள் முடிவடைந்தவுடன் பராமரிப் புப் பணிகளும் மேற்கொள் ளப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.1,934 கோடியே 84 லட்சம் ஆகும். முதல்கட்டப் பணிகளுக்கு ரூ.604 கோடியே 77 லட்சம் நிதிக்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தின் முக்கிய நோக்கம், கழிவுநீர் கூவத்தில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவு மேலாண்மை, நதியின் வெள் ளநீர் கொள்ளளவை மேம் படுத்தி பராமரித்தல், கூவம் நதிக் கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான திட்டமிடல், பல்லுயிர் பெருக் கத்தை மீட்டு சுற்றுச்சூழலை மேம்படுத்தி நகர்ப்புறங்களில் நதியின் கரையோரங்களில் வளர்ச்சிப் பணிகளை மேற் கொள்ளுதல் ஆகியவை யாகும்.

மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட ரூ.87 கோடியே 35 லட்சத்து 41 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் ரூ.19 கோடியே 62 லட்சத்து 47 ஆயிரம்

மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 82 குடிநீர் வாரிய அலுவலகக் கட்டிடங்கள், 58 பணிமனை அலுவலகங்கள் மற்றும் ரூ.3 கோடியே 22 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 78 பொது வரி வசூல் மையங்கள் என மொத்தம் ரூ.110 கோடியே 19 லட்சத்து 98 ஆயிரம் மதிப் பீட்டிலான கட்டிடங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

மீனம்பாக்கத்தில் ரூ.4 கோடியே 70 லட்சத்து 27 ஆயிரம் செலவில் சுமார் 5 ஆயிரம் பேருக்கான குடிநீர் மற்றும் பாதாள சாக் கடைத் திட்டங்களை தொடங்கி வைத்தார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.719 கோடியே 67 லட்சத்து 25 ஆயிரம் ஆகும். இந்நிகழ்ச் சியில், அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, சென்னை மேயர் சைதை துரைசாமி, தலைமைச் செயலாளர் கு.ஞானதேசிகன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரிய மேலாண்மை இயக்குநர் பி.சந்திரமோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.___

**தடுப்பணை போன்ற கட்டமைப்பால் பாறை நிரம்பிய பகுதி பசுமையானது_: மழைநீர் சேமிப்பில் புதுமை_ - உடுமலை விவசாயி சாதனை_**



உடுமலை அருகே விவசாயி ஒருவர் தனக்கு சொந்தமான நிலத்தில் உள்ள பாறைகளை உடைத்து 15 இடங்களில் மழை நீர் சேமிப்புக்கென தடுப்பணை போன்ற கட்டமைப்புகளை ஏற்படுத்தி விவசாயம் செய்து வருகிறார்.

திருப்பூர் மாவட்டம், உடுமலையில் இருந்து சுமார் 25 கிமீ தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ளது பாலாறு. இங்கு திருமூர்த்தி அணை அருகில் இருந்தாலும் அதன்மூலம் நீர் கிடைக்காத பகுதியாகவே உள்ளது. இதனால் மழை நீர் மட்டுமே பாசனத்துக்கான முக்கிய நீர் ஆதாரம்.

திருமூர்த்தி அணை நிரம்பினால் வெளியேற்றப்படும் உபரி நீர் பாலாறு மூலம் திறக்கப்படும். அவ்வளவு எளிதில் அணை நிரம்பாது என்பதால் உபரி நீர் திறப்பு மிகவும் அரிதான நிகழ்வு என்கின்றர் விவசாயிகள். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தண் ணீர் வரத்து இல்லாமல் விவசாயம் நலிவை சந்தித்து வருகிறது.

இதனால் ஆழ்குழாய் மற்றும் கிணற்று நீர் பாசனம்தான் அங்குள்ள விவசாயிகளுக்கு கைகொடுக்கும் நீராதாரம். ஆகவே பெரும்பாலான விவசாயிகள் தென்மேற்கு பருவ மழை, வடகிழக்கு பருவ மழைக்

காலங்களில் கிடைக்கும் கிணற்று நீரைக் கொண்டு தென்னை உள்ளிட்ட பாசனத்தை மேற் கொண்டு வருகின்றனர்.

தண்ணீரின் நிலை இப்படி இருக்க, அதே பகுதியில் விவசாயி ஒருவர் தனக்கு சொந்தமான கரடு முரடான பாறைகள் நிறைந்த நிலத்தை பக்குவப்படுத்தி, பசுஞ்சோலையாக மாற்றி சாதனை புரிந் துள்ளார்.

கேரளத்தை பூர்வீகமாக கொண் டவர் ஜோசப் பாப்லே (64). அமெரிக்காவில் கம்ப்யூட்டர் இன்ஜினியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். பாலாறு துறையில் அவருக்கு சொந்தமான 40 ஏக்கர் நிலத்தில் செழுமையான விவசாயம் செய்து ஓய்வுக் காலத்தை கழித்து வருகி றார்.

இது குறித்து அவர் கூறியதா வது: “கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் குறைவான விலையில் கிடைத்த தால் தண்ணீர் வசதியே இல்லாத வறண்ட பாறைகளால் ஆன 40 ஏக்கர் நிலத்தை வாங்கினேன். அதில் படிப்படியாக பாறைகளை உடைத்து, அதனையே மழை நீரை தேக்கும் அரணாக அமைத்தேன். அதன்படி சுமார் 50 ஆயிரம் டன் கற்கள் கிடைத்துள்ளன.

கேரள மாநிலத்தில் இருப்பதைப் போல மேலிருந்து கீழாக 15 இடங் களில் தடுப்பணை போன்ற நீர் சேகரிப்பு அடுக்குகளை ஏற்படுத்தி னேன். கற்களை வரிசையாக அடுக்குவதன் மூலம் இந்த அடுக் குகளை உருவாக்கினேன். அதே போல நிலமட்டத்தில் இருந்து, சுமார் 800 அடி உயரமான பாறை களை உடைத்து அங்கும் சுமார் 3000 மீட்டர் சுற்றளவுக்கு கல் வரிசையை உருவாக்கினேன்.

இவ்வாறு 3 இடங்களில் கிணறு கள் வெட்டப்பட்டுள்ளன. இங்கு பெய்யும் மழை நீர் ஒரு சொட்டுக் கூட வெளியில் வீணாகாத வகை யில் சேகரிப்பு முறையை உருவாக் கியுள்ளேன்.

அதன் மூலம் 20 ஏக்கரில் தென் னையும், 8 ஏக்கரில் நெல்லியும், இரண்டரை ஏக்கரில் முந்திரியும் விளைகின்றன. இதுதவிர 3 ஆயிரம் கோகோ, ஆயிரம் வெண்ணிலா, எள் ஆகியவற்றையும் பயிர் செய்து வருகிறேன். இதனால், நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. எனக்கு

மட்டுமல்ல, நீர் சேமிப்பு முறையால், சுற்றியுள்ள விவசாயிகளின் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களின் நீர்மட்டமும் உயர்ந்து உள்ளது'' என்றார்.___

**பாம்பன் மீனவர் வலையில் சிக்கிய ராட்சத மீன்_: ஆணாக இருந்து பெண்ணாக மாறும் தன்மை கொண்டது_**



பாம்பன் விசைப்படகு மீனவர் வலையில் ஆணாக இருந்து பெண் ணாக மாறும் களவாய் மீன் சிக்கியது.

ராமநாதபுரம் மாவட்டம், பாம் பன் தெற்கு கடல் பகுதியில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட விசைப்படகுகள் வியாழக்கிழமை கடலுக்குச் சென்றன. மன்னார் வளை குடா பகுதியில் மீனவர்கள் நள்ளிரவில் மீன்பிடித்துக் கொண் டிருந்தனர். அப்போது மீனவர் ஒருவர் வலையில் ராட்சத புள்ளிக் களவாய் மீன் ஒன்று சிக்கியது. அது சுமார் 25 கிலோ எடையும், 4 அடி நீளமும், 2 அடி உயரமும் உடையதாக இருந்தது.

மன்னார் வளைகுடா பகுதியில் அதிகபட்சமாக 10 கிலோ வரை எடை கொண்ட களவாய் மீன் மட்டுமே பிடிபடுவது வழக்கம். ஆனால், இது

ராட்சத களவாய் மீனாக இருந்ததால், இதை பொதுமக்கள் நேற்று கடற்கரை யில் ஆர்வத்துடன் வந்து பார்வை யிட்டனர். இந்த மீன் குறித்து மரைக்காயர் பட்டினத்தில் உள்ள மத்திய மீன் ஆராய்ச்சி துறை ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறியது:

இந்த மீனின் விலங்கியல் பெயர் Epinephelus. தமிழில் களவாய் மீன் என்று அழைக்கப்படுகிறது. மன்னார் வளைகுடா கடல் பகுதியில் தாழங்களவாய், புள்ளிக் களவாய், மரக்களவாய் ஆகிய மூன்று வகை மீன்கள் காணப்படு கின்றன.

களவாய் மீன்களுக்கு ஆண் தன்மையும், பெண் தன்மையும் கலந்தே பிறக்கின்றன. இதனால் ஆணாக விரும்பினால் ஆணாக வும், பெண்ணாக விரும்பினால் பெண்ணாகவும் மாறும் வாய்ப்பு இயற்கையாகவே அவற்றுக்கு உண்டு. ஆண் மற்றும் பெண் தன்மைகளோடு முதல் 4 ஆண்டு களில் இருக்கும். அதைத் தொடர்ந்து களவாய் மீன் 2 அடி நீளம் வளர்ச்சி அடைந்து பெண் ணாக இனமுதிர்ச்சி அடையும். மீண்டும் தன்னுடைய 15-வது வயதில் ஆண் மீனாக மாறுகிறது.

களவாய் மீன்களின் எண் ணிக்கை குறைந்துவிட்டால், அதிக வயதான பெண் மீன்கள், ஆணாக மாறாமல் பெண்ணாகவே இருந்து தன்னுடைய இனத்தைப் பெருக்க துணை செய்யும் என்றார்.______

**சமையல் எண்ணெய் மீதான சுங்க வரி 5 சதவீதம் உயர்வு_**

மத்திய அரசு சமையல் எண்ணெய் மீதான இறக்குமதி வரியை (சுங்க வரி) 5 சதவீதம் உயர்த்தியுள்ளது. இது தொடர்பாக வெள்ளிக்கிழமை மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டது. உள்நாட்டுத் தொழிலைக் காக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய உற்பத்தி வரி மற்றும் சுங்க வரி வாரியம் வெளியிட்ட அறிக்கையில் கச்சா சமையல் எண்ணெய் மீதான சுங்க வரி 7.5 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதமாக உயர்த்தப்பட் டுள்ளது.

அதேசமயம் சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் மீதான சுங்க வரி 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.
நவம்பர் முதல் அக்டோபர் வரையான காலத்தில் எண்ணெய் இறக்குமதி 1.4 கோடி டன்னாக இருக்கும் என கணக்கிடப்பட் டுள்ளது. முந்தைய ஆண்டு இதே காலகட்டத்தில் 1.16 கோடி டன்னாக இருந்தது.


விகடன்

**பூமிக்கு காய்ச்சல் வந்தால் என்னவாகும்? ஓர் எச்சரிக்கை ரிப்போர்ட்!**

புவி வெப்பமடைதல் - இது ஒரு குறிப்பிட்ட சாரார் மட்டுமே பயன்படுத்தும் சொல்லாகத்தான் காணப்படுகிறது. படித்தவர்களே கூட புவி வெப்பமடைதல் குறித்து தெளிவுறப் புரிந்து கொள்ளவில்லை என்பது வேதனை தரும் உண்மை. "அதெப்படிங்க பூமி தானாச் சூடாகும்?" என்று விளையாட்டாகக் கேட்கும் பலருக்கும் இதன் விவகாரம் புரிந்தால் விளையாட்டுத்தனம் காணாமல் போய்விடும்.

**புவி வெப்பமடைதல் என்றால் என்ன?**

மிக எளிமையாகப் புரியும்படி சொன்னால், நம் உடலின் வெப்ப நிலை 98 டிகிரி ஃபேரன்ஹீட்டைத் தாண்டி அதிகரித்தால் நமக்கு எப்படி காய்ச்சல் ஏற்படுகிறதோ அப்படி பூமியின் வெப்ப நிலை அதிகரித்து, நம் வாழ்விடமான இந்தக் கோளுக்கு ஏற்பட்டுள்ளக் காய்ச்சலே புவி வெப்பமடைதலாகும்.



**பூமிக்குக் காய்ச்சலா?**

ஆம். பூமி ஓர் உயிருள்ளக் கோள். நாம் சுவாசிப்பதைப் போலவே மிக நிதானமாக மூச்சை இழுத்தும் வெளியேற்றியும் கொண்டிருக்கிறது இந்தக் கிரகம். ஒரு மூச்சை இழுத்து வெளியேற்றுவதற்கு கிட்டத்தட்ட ஓராண்டாகிறது பூமிக்கு. விளக்கிச் சொன்னால், பூமி, சூரியனிடமிருந்தும், எரிமலைகளிடமிருந்தும், மற்றும் அண்டக் கதிர்வீச்சுகளின் மூலமாகவும் கரியமில வாயுவை (CO2) உள்வாங்கிக் கொள்கிறது. அடுத்த ஆறு மாதங்களில் மரங்களின் மூலம் வெளியேற்றப்படுகிற பிராண வாயுவை(O2) வெளிக்கொணர்ந்து, உள்வாங்கியக் கரியமில வாயுவைச் சமன்படுத்துகிறது. நம் நுரையீரலைப் போல, பெருங்கடல்களும் காடுகளும் பூமியின் கரியமில வாயுவைச் சுத்திகரித்து வெளியேற்றுகின்றன.

நம் நுரையீரலால் தாங்கிக் கொள்ளக் கூடிய அளவை விட அதிகமாகக் கரியமில வாயுவை உள்ளிழுத்தால், மூச்சுத் திணறி நாம் இறந்துபோவோம். அதேதான் தற்போது பூமிக்கு நடந்து

கொண்டிருக்கிறது. பூமியால் உள்ளிழுத்துச் சமன்படுத்தக் கூடிய அளவைவிட மிக அதிகமான அளவு கரியமில வாயுவை நாம் பூமியிடம் தள்ளிக் கொண்டிருக்கிறோம். பூமி மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது.



**இதற்கென்ன ஆதாரம்?**

பெருங்கடல்கள் தன்னுள் இறங்குகின்ற கரியமில வாயுவை, தாதுப் பொருட்களாக மாற்றித் தேக்கி வைத்துக்கொள்கின்றன. பூமியின் வடதுருவத்திலிருக்கும் பனிப்பாறைகளும் அத்தகையத் தன்மை கொண்டவையே. எனவே வட துருவத்தின் பனிப்பாறைகளை அகழ்ந்து ஆய்வு செய்தால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் சுற்றுச்சூழலில் படிந்திருக்கும் கரியமிலத்தின் அளவு மிகத்துல்லியமாகத் தெரியும். அவ்வாறு ஆய்ந்து பார்க்கையில் ஒரு திடுக்கிடும் உண்மைத் தெரிய வந்துள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் முன்பு வரை, இத்தகையக் கரியமில வாயுவின் படர்வு, 1/300 விழுக்காடு; அதாவது ஒரு விழுக்காட்டின் முன்னூறில் ஒரு பங்கு. தற்போது அதன் படர்வோ 40 விழுக்காடு. 12000 மடங்கு வேகத்தில் நம் சுற்றுச் சூழலில் கரியமில வாயுவைக் கடந்த 150 வருடங்களாக கலந்து வருகிறோம் நாம்.

**சரி. அதனாலென்ன?**


இதனால் பூமியின் ஓசோன் கிழிந்து, பசுமையக வாயுக்கள் சுற்றுச்சூழலில் நிறைகின்றன.

பூமி, சூரியனிடமிருந்து பெறுகின்ற ஒளிக்கற்றைகளில், ஆற்றல் தரும்

கதிர்களோடு சேர்த்து, 'அல்ட்ராவயலட்', ‘இன்ஃப்ராரெட்’ போன்ற பல்வேறு தீங்கு விளைவிக்கும் கதிர்களும் இருக்கின்றன. அவற்றை நேரடியாக நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. எனவேதான் இயற்கையின் அமைப்பில் பூமியைச் சுற்றியப் பாதுகாப்பு வளையம் போல ‘ஓசோன்’ படலம் (O3) இருக்கிறது.

இது புற ஊதாக்கதிர் போன்றவறை வடிகட்டி நமக்குத் தேர்ந்த, மிதமான சூரிய ஒளியை அனுப்புகிறது. இப்படி வடிகட்டி அனுப்பப்படுகிற வெப்பத்தைப் பூமி உள்வாங்கியபின், முற்றிலும் பிரதிபலித்து திருப்பி அனுப்பிவிடுகிறது. அவ்வாறு மொத்த வெப்பமும் திருப்பி அனுப்பப்பட்டால் பூமி ஒரு பெரும் பனிப்பந்தாகவேதான் இருக்க முடியும். ஆகவே அவ்வாறு ஆகவிடாமல், பூமி திருப்பி அனுப்புகிற வெப்பத்தில், ஒரு கணிசமான அளவைத் தடுத்து பூமியிலேயே தங்க வைப்பவைதான், கார்ன்டை ஆக்ஸைடு, நைட்ரஸ் ஆக்ஸைடு, மீத்தேன் போன்ற பசுமையக வாயுக்கள்.

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' - இதுதான் இன்றைய பசுமையக வாயுக்களின் நிலை. நம் பூமியிலுள்ள அத்தனை எரிமலைகளின் வெடிபொருள் வெளியேற்றத்தைச் சேர்த்தால், 500 மில்லியன் டன் கரியமில வாயு ஆகும் என்று கணக்கிட்டிருக்கின்றனர் அறிவியலாளர்கள். 'இதை விடவா நாம் அதிகக் கரியமில வாயுவை வெளியேற்றிவிடப் போகிறோம்?’ என்ற கேள்வி எழலாம்.




மயங்கி விழுந்து விடாமலிருக்க, அருகிலுள்ள எதையாவது பிடித்துக் கொள்ளுங்கள். ஆம். இந்த 500 மில்லியன் டன் என்பது நாம் வெளியேற்றுகின்ற 30 பில்லியன் டன் கரியமில வாயுவில் 2 விழுக்காடு கூடக் கிடையாது. இதன் மூலம் பருவ நிலைகள் மாறி, பனிப்பாறைகள் உருகி, வெள்ளப் பெருக்கெடுத்து, பூமி வாழ்வாதாரமற்றக் கோளாக, புதனைப் போல், வெள்ளியைப் போல் மாறிவிட அநேக வாய்ப்புகள் உண்டு.

**எல் நினோ - ஓர் எச்சரிக்கை**

ஸ்பானிய மொழியில், குழந்தை எனப்பொருள்படும் இந்த 'எல் நினோ' நிஜமாகவே வானுக்கும் கடலுக்கும் பிறக்கும் குழந்தைதான். தொடர் கரியமில சேகரிப்புக்காரணமாக, கிழக்குப் பசிபிக் கடலில் ஏற்படும் ஒரு வெப்பச் சுழல் கூட்டலைகளுக்குத்தான் எல் நினோ என்று பெயர். இந்தக் கடல் மாறுபாட்டின் மூலமாக நீரிலிருந்து நிலம் நோக்கி வருகிற காற்றின் அடர்த்தி மாறிப்போய், பருவ நிலைகள் கடுமையான மாற்றத்திற்குள்ளாகும்.

2014, 2015, 2016 ஆம் ஆண்டுகள் பூமியின் வடபாதியில் அதீதக் குளிருடனும், தென்பாதி அதீத வெப்பத்துடனும் காணப்படும். இது கடந்த

72 ஆண்டுகளாகப் பூமி காணாத மாற்றமாகும். இந்தக் கட்டுரையை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் போதே பசிபிக் பெருங்கடலின் தலையைச் சுற்றி மூன்று பெரும்புயல்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்நிலை மாறாது தொடர்ந்தால், பனிப்பாறைகள் உருகிக் கடல் மட்டம் 58 மீட்டர் உயரும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

**நம்மால் என்ன செய்ய முடியும்?**

இயற்கையை எதிர்த்துப் போரிட்டு, ஒரு போதும் நம்மால் வெல்ல முடியாது. இன்றைய தேதியில் புவி வெப்பமடைதலை இதே நிலையில் நிறுத்தி உயர விடாமல் தடுக்க, ஆண்டொன்றுக்கு, 12 லட்சம் கோடி மரக்கன்றுகள் நட வேண்டும் என்கின்றனர் அறிவியலாளர்கள். கவிநடையில் சொன்னால், மரங்கள்தான் ஓசோன் ஓட்டையைத் தைக்கும் ஊசிநூல்.


மேலும், உலக நாடுகளை ஆளுகின்ற அரசாங்கங்கள் எல்லாம், உலகின் இந்த அவசர நிலையைப் புரிந்து கொண்டு, நிலக்கரியையும் மற்ற புராதான எரிபொருள்களையும் எரிப்பதைத் தவிர்த்து, சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் ஆற்றலைப் பயன்படுத்தி, மின்சாரத்தையும் மற்ற உந்து சக்திகளையும் உற்பத்தி செய்ய வேண்டும். இல்லையேல் அவர்கள் ஆள்வதற்கும், வாழ்வதற்கும் இந்த பூமி இருக்காது என்பது காலம் உறுதியாக நிர்ணயிக்கும் விதி.

**15 பாடிகாட்ஸ்! உச்சி முதல் உள்ளங்கால் வரை...**




**"**உடலின் அனைத்து உறுப்புகளும் திறம்பட இயங்கினால்தான் நம்மால் அன்றாட வேலைகளை சிறப்பாகச் செய்ய முடியும். ஒவ்வொர் உறுப்பையும் பாதுகாக்க, தனிக் கவனம் எடுப்பது நல்லது. இதற்கு, பெரிய மெனக்கெடுதல்கள் தேவை இல்லை. நம் அன்றாட உணவில் சின்ன சின்ன மாற்றங்களை செய்தாலே போதும். சில உணவுப் பொருட்களின் தோற்றம், குறிப்பிட்ட உறுப்புகளின் தோற்றத்துடன் பொருந்தியிருப்பதோடு, அவற்றைச் சாப்பிடும்போது, அந்தந்த உறுப்புகளுக்கு பலத்தையும் கூட்டுகின்றன” என்று சொல்லும் ஊட்டச்சத்து ஆலோசகர் ஸ்ருதிலயா எந்தெந்த உணவுகள், எந்தெந்த உறுப்புகளோடு பொருந்துகின்றன என்பதையும், அவை என்னென்ன

நன்மைகளைத் தருகின்றன என்பதையும் விளக்குகிறார்.




**மூளை - வால்நட்**

**வால்நட்டின்** வடிவத்தைக் கவனித்திருக்கிறீர்களா? மூளையின் மினியேச்சர் போலவே இருக்கும். அக்ரூட்டை பிரெய்ன் ஃபுட் (மூளை உணவு) என்பார்கள். ஒமேகா 3 ஃபேட்டி ஆசிட் நிறைந்துள்ளதால்

மூளையின் செயல்பாட்டுக்கும், சீரான இயக்கத்துக்கும், வளர்ச்சிக்கும் உதவுகிறது. குழந்தைகள், பள்ளி செல்லும் பிள்ளைகள், கர்ப்பிணிகள் அவசியம் சாப்பிட வேண்டிய உணவுகளில் ஒன்று வால்நட். அறிவுத்திறன் (ஐ.க்யூ) மேம்படவும், படைப்பாற்றல் அதிகரிக்கவும் உதவும்.

சமீப ஆய்வுகளில், வால்நட்டில் புரதச்சத்துக்கள் இருப்பதால், மறதி நோய் வராமல் தடுக்கும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தினமும் இரண்டு மூன்று அக்ரூட் சாப்பிட்டுவந்தால், மூளை செல்கள் புத்துயிர் பெறும். உயர் ரத்த அழுத்தம் கட்டுக்குள் இருக்கும்.

**கண்கள் - கேரட், பாதாம்**

**க**ண்களை ஆன்மாவின் ஜன்னல் என்பார்கள். கண்களைப் பாதுகாக்க சன் கிளாஸ், கண்ணுக்கான பயிற்சிகள், அடிக்கடி கண்களைக் கழுவுதல், ஆண்டுக்கு ஒரு முறை கண் பரிசோதனை செய்வது நல்லது.

பார்வைத்திறன் மேம்பட கேரட், பப்பாளி நல்ல பலனைத் தரும். கேரட்டை குறுக்காக வட்ட வடிவில் வெட்டினால், கண்ணின் (Pupil, iris) தோற்றத்தைப் போல இருக்கும். தினமும் ஒரு கேரட் சாப்பிட்டால், கண்களில் புரை உருவாவது தடுக்கப்படும். கேரட்டில் உள்ள பீட்டா கரோட்டீன், வயதாகும்போது வரும் பார்வைக்குறைபாடுகளை (Macular degeneration) தடுக்கும். கிட்டப்பார்வை, தூரப்பார்வை போன்ற பிரச்னைகள் வராது. கண்களுக்குச் செல்லும் ரத்த ஓட்டத்தைச் சீராக்கும். அதுபோல், பாதாமின் தோற்றம், கண்களின் வெளிப்புற அமைப்பைப் போலவே இருக்கும். கண்களுக்கு நன்மையைச் செய்யக்கூடிய சத்துக்கள் பாதாமில் நிறைந்துள்ளன. கண் மை தயாரிப்புக்கு பாதாம் முக்கிய பொருள். தினமும், நான்கைந்து பாதாமை சாப்பிட்டால் கண்களுக்கு நல்லது.

**காது - காளான்**

**கா**துகளில் காக்லியா (Cochlea) எனும் கேட்கும் திறனுக்கான உறுப்பு வளர வைட்டமின் டி தேவை. அவற்றை காளானும் சூரிய ஒளியும் தரும். காளானில் வைட்டமின் டி, டி3, டி2 சத்துக்கள் நிறைந்துள்ளன. கால்சியம் சத்தை உடல் கிரகித்துக்கொள்ள வைட்டமின் டி உதவுகிறது. உள்ளுறுப்புகளின் வளர்ச்சி, ஆரோக்கியமான எலும்பு வளர்ச்சிக்கு ஆதாரமாக காளான் இருக்கிறது. மார்பகம், பிராஸ்டேட் புற்றுநோய்களைத் தடுக்கும். அதிகமாக ஈஸ்ட்ரோஜன் சுரப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சரி செய்யும். விலங்குகளிடமிருந்து பெறப்படும் புரதத்தை காளானிலிருந்தும் பெற முடியும்.

**நுரையீரல் - திராட்சை**

**தி**ராட்சைக் கொடியில் தொங்கும் திராட்சைப் பழத்தைப் பார்த்தால், திராட்சைக் கொத்து நுரையீரல் போலவும், அதில் உள்ள ஒவ்வொரு திராட்சையும் ஆல்வியோலி எனப்படும் நுண்காற்று அறைகள் போலவும் தோன்றும். ரத்தத்தில் உள்ள கார்பன் டை ஆக்ஸைடைச் சுத்திகரித்து, சுவாசக் காற்றில் உள்ள ஆக்சிஜனைப் பிரித்து, ரத்த அணுக்களில் நிறைத்து அனுப்புகிறது நுரையீரல். இந்தச் செயல்பாட்டை மேம்படுத்தும் திறன், திராட்சைப் பழத்துக்கு உண்டு. நுரையீரலில் வரக்கூடிய புற்றுநோய் செல்களை அழிக்கும் திறன் திராட்சைக்கு உண்டு. கர்ப்பிணிகள் திராட்சையை 23-வது வாரத்தில் இருந்து சாப்பிட்டுவந்தால், குழந்தையின் வளர்ச்சிக்கு உதவும். திராட்சையில் உள்ள ப்ரோஆந்தோசயனிடின் (Proanthocyanidin) ஆஸ்துமா பிரச்னையின் வீரியத்தைக் குறைக்கும்.திராட்சையில் உள்ள பாலிபீனால் நுரையீரல், வாய், சுவாசப் பாதை, மூச்சுக்குழாய், கணையம் போன்ற இடங்களில் ஏற்படும் புற்றுநோயைத் தடுக்கும்.

**மார்பகம் - ஆரஞ்சு**

**பெ**ண்களின் மார்பக வடிவில் அமைந்திருக்கிறது ஆரஞ்சுப் பழம். சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற சிட்ரஸ் வகைப் பழங்களில் உள்ள லிமோனாட்ய்ட்ஸ் (Limonoids) புற்றுநோய் செல்களை வளரவிடாது. சிட்ரஸ் பழங்களில் தினமும் ஒன்றைச் சாப்பிட்டுவந்தால், புற்றுநோய்க்கான வாய்ப்பு குறையும். மார்பகச் செல்களின் ஆரோக்கியம் மேம்படும். வைட்டமின் சி சத்துக்கள் நிறைந்துள்ளதால், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இதயத்தில் படிந்த கெட்ட கொழுப்புகளை அகற்றும். சுவாசம் தொடர்பான நோய்கள், சில வகைப் புற்றுநோய்கள், அல்சர், மூட்டுநோய், சிறுநீரகக் கற்கள் போன்ற பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.

சிட்ரஸ் நிறைந்த பழங்களை இயற்கையான ஆன்டி-கார்சினோஜென் (Anti-carcinogen) எனச் சொல்லலாம். தினமும் சாப்பிட்டுவர, புற்றுநோய் வரும் ஆபத்துகள் முற்றிலுமாகத் தடுக்கப்படும்.

**இதயம் - தக்காளி**

**சா**ம்பார், ரசம், புளிக்குழம்பு என நம்முடைய அன்றாட உணவுகளில் தக்காளிக்கு முக்கிய இடம் உண்டு. இனிப்பு மற்றும் புளிப்பு சுவைகொண்ட தக்காளியில் சத்துக்கள் ஏராளம். லைக்கோபீன் (Lycopene) என்ற நிறமிதான், தக்காளியின் சிவப்பு நிறத்துக்குக் காரணம். இது உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் கரைத்து, இதயத்துக்கு நன்மை விளைவிக்கிறது. கெட்ட கொழுப்பு குறைவதால், தமனிகளில் (Arteries) அடைப்புகள் ஏற்படாது. லைக்கோபீன், சில வகை புற்றுநோய் செல்களை அழிக்கும் தன்மை கொண்டது. உணவில் தக்காளியை அதிக அளவில் சேர்த்துக்கொண்டவர்களின் இதயம் பலமாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதை சில ஆய்வுகள் ஊறுதிசெய்திருக்கின்றன. சிவப்பு நிறப் பழங்களையும் காய்களையும் சாப்பிட்டால், இதயம் ஆரோக்கியம் பெறும். இவற்றைத் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால், இதயம் தொடர்பான பிரச்னைகள் நெருங்காது.

**கணையம் - சர்க்கரைவள்ளிக் கிழங்கு**கணையத்தின் வடிவத்தில் இருக்கும் சர்க்கரைவள்ளிக் கிழங்கு கெட்ட கொழுப்பைக் குறைக்கும். சர்க்கரை வள்ளிக்கிழங்கின் கிளைசெமிக் குறீயீட்டின் அளவு (ரத்தத்தில் சர்க்கரை சேரும் திறன்) குறைவு. சர்க்கரை நோயாளிகள் இதை அளவாகச் சாப்பிடலாம். சர்க்கரைவள்ளிக் கிழங்கு கணையத்தின் செயல்திறனைப் பாதுகாத்து, ரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள்வைக்க உதவுகிறது. மேலும், இதில் வைட்டமின் பி6 அதிக அளவில் உள்ளது. இது கணைய செல்கள் ஆரோக்கியமாக இருக்கவும், கணையப் புற்றுநோய் செல்களை வளரவிடாமல் தடுக்கவும் உதவுகிறது.

சர்க்கரை நோயாளிகள் மா, பலா, வாழை, சீதா, சப்போட்டா, திராட்சை ஆகியவற்றைத் தவிர்க்கலாம். பழச்சாறுகளைவிட பழமாகச் சாப்பிடுவது நல்லது.

**வயிறு - இஞ்சி**

**வ**யிற்றுக்கு நன்மை செய்யக்கூடிய உணவுகளில் முக்கியமானது இஞ்சி. செரிமான சக்திக்கு இஞ்சி உதவும் என்பதால், இஞ்சிதான் வயிற்றின் `நண்பேண்டா.' மலச்சிக்கல், வயிற்றுக்கோளாறு போன்ற பிரச்னைகளைச் சரிசெய்யும்.

சீரகம், சோம்பு, ஏலக்காய், புதினா போன்றவற்றில் குர்குமின் (Curcumin) நிறைந்துள்ளது. இவற்றைத் தினமும் உணவில் சேர்த்துக்கொண்டால், வயிற்றுக்கு நல்லது. கஷாயம், மூலிகை டீ போன்ற ஏதேனும் ஒரு திரவ உணவைச் சேர்த்துக்கொள்வது நன்மையைத் தரும்.

நிறையப் பேருக்கு அல்சர் பிரச்னை பாடாய்ப்படுத்தும். இவர்கள், 50 மி.லி அளவு இஞ்சி, சீரகம் போன்ற குர்குமின் சத்துக்கள் உள்ள உணவுகளைக்கொண்டு டீ தயாரித்து சாப்பிட்டால், வயிற்றுப் பிரச்னைகள் தீரும்.

**சிறுநீரகம் - கிட்னி பீன்ஸ்**

உயர் தரமான புரதத்தை உள்ளடக்கி வைத்துள்ளது கிட்னி பீன்ஸ். கழிவுகளை உடலிருந்து வெளியேற்றும் வேலையைச் சிறுநீரகம் செய்கிறது. அதற்கு ஆதாரமான உயர் புரதம் கிட்னி பீன்ஸில் உள்ளது. சில வகை புரத உணவுகள் கொழுப்பைச் சேர்க்கும். அவை உடலுக்குக் கேடு. ஆனால், கிட்னி பீன்ஸில் உள்ள புரதம், நல்ல புரதம் என்பதால், கொழுப்பை உடலில் சேரவிடாது. அமினோ அமிலங்கள் நிறைந்துள்ளதால், சருமத்தின் பளபளப்பைக் கூட்டும். மலச்சிக்கலைப் போக்கும். இதயம் தொடர்பான பிரச்னைகள் மற்றும் மறதி நோயைச் சரிசெய்யும்.

**கருமுட்டை (ஓவரி) - ஆலிவ்**

கருமுட்டையின் வடிவத்தில் ஆலிவ் காய்கள் இருக்கின்றன. ஆலிவ்வில் உள்ள சத்துக்கள் எள், மஞ்சள் போன்ற நம் ஊர் உணவுகளிலும் நிறைந்துள்ளன. ஓலிக் (Olic) ஆசிட் நிறைந்தது ஆலிவ். நல்லெண்ணெய், தவிட்டு எண்ணெய், முட்டை, நட்ஸ், மீன் போன்றவற்றிலும் ஓலிக் ஆசிட் கிடைப்பதால், அவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளலாம். இந்த உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டால், ஓவரியன் புற்றுநோய் வராமல் தடுக்க முடியும்.

ஊட்டச்சத்துக்கள் மிகுந்த உணவுகளைச் சாப்பிடும் பழக்கத்தை அடிப்படையாக மாற்றிக்கொண்டாலே, கருமுட்டையின் வளர்ச்சி சீராக இருக்கும்.

**கர்ப்பப்பை - அவகேடோ**

அவகேடோவின் விதை அமைப்பு, கர்ப்பப் பையின் உள் வடிவம் போல இருக்கும். ஃபோலிக் சத்துக்களின் களஞ்சியமாக இருப்பதால், அவகேடோ சாப்பிடுவது கர்ப்பப்பைக்கு நல்லது. ஃபோலிக் சத்து நிறைந்துள்ள நம் நாட்டு காய்கறிகளும் உள்ளன. இவற்றைச் சாப்பிட்டும் கர்ப்பப்பையைப் பலப்படுத்தலாம்.

இனப்பெருக்க உறுப்புகளுக்கு மிகவும் அவசியமான ஃபோலிக் ஆசிட் சத்து, கர்ப்பப்பை வாய் புற்றுநோய், புற்றுநோய் வருவதற்கு முந்தைய நிலையில் தோன்றும் சிக்கல்களைக் குறைக்கும். வாரம் ஒரு அவகேடோ சாப்பிட்டாலே ஃபோலிக் சத்துக்களின் தேவை பூர்த்தியாகும்.

கர்ப்பப்பை வாய் புற்றுநோயை வராமல் அழிக்கும் ஆற்றல் அவகேடோ பழத்துக்கு உண்டு. மேலும், உடல் எடை குறைந்த குழந்தைக்கு நல்ல ஆகாரம். இந்தப் பழத்தை, பழுத்த பிறகே சாப்பிடவேண்டும். காய், செங்காயைச் சாப்பிடக் கூடாது.

**செல்கள் - வெங்காயம்**

தின பூமி

**அமராவதி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு: ஜெயலலிதா உத்தரவு**

சென்னை, முதல்-அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடக்கோரி அமராவதி பிரதானக் கால்வாய் கிராம நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்கத்தினர் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய பாசனப் பகுதிகளுக்கு இன்று (19-ந்தேதி) முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 47,117 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**ராஜபாளையம் பகுதியில் இயந்திர நெல் நடவு செய்ய அரசு மானியம்: வேளாண் அதிகாரி தகவல்**



ராஜபாளையம், செப். 18–

ராஜபாளையம் வட்டாரத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பாய் நாற்றங்கால் அமைத்து இயந்திர நடவு செய்வதற்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது.

ராஜபாளையம், வடக்கு வெங்காநல்லூர், சேத்தூர், தேவதானம் பகுதிகளில் பாய் நாற்றங்கால் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நடவு இயந்திரம் மூலம் 14 முதல் 17 நாட்கள் ஆன இளவயது நாற்றுகளை நடுவதினால் பக்க தூர்கள் அதிகம் கட்டி ஏக்கருக்கு 5 முதல் 8 மூடைகள் வரை மகசூல் அதிகம் பெற முடியும்.

நெல் இயந்திரம் மூலம் நடவு செய்த விவசாயிகள் அனைவரும் ஹெக்டேருக்கு பின்னேற்பு மானியமாக ரூ.3000–ம், பயறு சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு ரூ.4000 மதிப்பிலுள்ள விதைகள் மற்றும் இடுப்பொருட்கள் பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது.

பின்னேற்பு மானியம் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரையோ அல்லது வேளாண்மை விரிவாக்க மையத்தையோ தொடர்பு கொள்ளலாம் என ராஜபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ண மூர்த்தி தெரிவித்துள்ளார்.